# தேவனைப் பற்றிய உபதேசங்கள்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 13

பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்து இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

# முகவுரை

கிறிஸ்துவுக்குள் நாம் இருப்பதின் மகிழ்ச்சியே, நாம் இப்பொழுது நமது பரலோக பிதாவோடு தொடர்புகொள்ளும் வாய்ப்புதான். தேவனைப் பற்றி அறிந்துகொள்ள அநேக காரியங்கள் உண்டு: அவருடைய குணாதிசயங்கள், அவருடைய கிரியைகள் மற்றும் அவருடைய வழிகள். முடிவில், அவரை அறிந்துகொள்ள வேண்டும், அவரைப் பற்றி அறிந்துக்கொள்வதல்ல என்று நாம் விளங்கிக்கொள்கிறோம்; ஆனால், நம்மால் முடிந்தவரை அவரைப்பற்றி அறிந்துகொள்வதென்பது, அவரை அறிந்துகொள்ளும் தொடர் நிகழ்ச்சியின் ஒரு பகுதியேயாகும் என நாம் அங்கீகரிப்பது அவசியமாகிறது.

இந்தப் புத்தகத்தில் நம்மால் முடிந்தவரை, கிறிஸ்தவ விசுவாசத்தின் அற்புதமான மகா உபதேசங்களை எளிய வார்த்தைகளில் வைக்க நாடுகிறோம். தேவனது மகாபெரிய குணா திசயங்களை விவரிக்க, சில நேரங்களில் நாங்கள் இறையியல் வார்த்தைகளையும் மொழி களையும் பயன்படுத்துவது அவசியமாகிறது. ஆனால், முடிந்தவரை ஒவ்வொரு வார்த்தை யையும் எளிய மொழியிலும் தெளிவாகவும் விவரிக்க முற்படுவோம். தேவனை விவரிக்கும் எல்லா முயற்சிகளிலும், அவரது வஸ்திரத்தின் ஓரத்தைக் காட்டிலும் குறைவாகவே தொட்டிருப்போம் என்பதை நாம் அறிகிறோம். எனினும் அவரை அறிந்து கொள்ளவும் இன்னும் அதிகமாக அவரை நேசிக்கவும் அவரை விளங்கிக்கொள்ள எங்களால் சிறப்பானதைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

எல்லையுள்ளவர்களாகிய நாம் எல்லையற்றவராகிய அவரை விளங்கிக்கொள்ள, நமது மொழி, அறிவு சார்ந்த திறன், உவமானங்கள் ஆகியவைகளின் மட்டுப்பாடுகள், அவரது மகிமைக்குக் குறைவாகவே இருக்கும் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இருப்பினும், தேவனையும் அவரது குணாதிசங்களையும் நாங்கள் விளங்கிக்கொண்ட குறைவாயுள்ள எதையாயினும், அவரை இன்னும் நல்ல முறையில் அறிந்துக்கொள்ள விரும்பும் எல்லா விசுவாசிகளின் அனுகூல நன்மைக்காக இங்கு அவைகளை விவரிக்கிறோம்.

இன்னும் கிறிஸ்துவின் சரீரமானது, கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்கதாக பூரண புருஷனாக நிலைநிறுத்தப்பட, நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்... அன்பினாலே சத்தியத்தை கைக்கொண்டு, எல்லாவற்றிலும் நாம் வளர்கிறவர்களாயிருக்க வேண்டும் (எபே. 4:13–15) என்பதே இந்த அஸ்திபார புத்தகத்தின் மிகச்சிறந்த முயற்சியாகும்.

நமது அற்புத பரலோக பிதா, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய இவர்களின் தெய்வீக குணாதிசயங்களை, நமது இருளான மனித தன்மையின் மூலமாக உற்றுப்பார்க்க, தேவன் நம்மெல்லாருக்கும் அவரது ஞானத்தைக் கொடுப்பாராக.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*அத்தியாயம் 1*

# தேவனுடைய குணாதிசயங்கள்

ஒரே மெய்யான தேவனாகிய (நமது பரலோகப்பிதா) உம்மையும், அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று, நமது ஆண்டவராகிய இயேசு யோவான் 17ஆம் அதிகாரத்தில், தமது ஜெபத்தில் கூறியுள்ளார் (யோவா. 17:3). இரட்சிப்பு என்பது பரலோகத்திற்கான பயணச்சீட்டு மட்டுமல்ல, ஆனால் தேவனது எல்லா குணாதிசயங்களையும் ஆராய்ந்து கண்டுபிடிக்கும் நித்தியமும், தேவனோடு ஆழமான உறவையும் அவரை விளங்கிக் கொள்ளுதலையும் அதிகப்படுத்திக்கொள்ளுவதுமாகும். தேவனை அறிந்து கொள்வதே, நாம் உயிர் வாழ்வதெல்லாவற்றினுடைய ஆரம்பமும் முடிவுமாகும்; இதுவே நாம் சிருஷ்டிக்கப்பட்டதன் காரணமுமாகும். இது அஸ்திபார சத்தியங்களின் தொடராயிருப்பதாலும், தேவனைப் பற்றிய பரிபூரண இறையியல் பகுப்பாய்வாயில்லாதபடியினாலும், புதிய விசுவாசி களுக்காக தேவனது குணாதிசயங்களில் அதிமுக்கியமானவைகளையும், தேவனைப் பற்றிய உபதேசங்களையும் இலேசாக தொட்டுச் செல்வோம்.

### *தேவனது அடிப்படையான குணாதிசயங்கள்*

தேவனைப்பற்றிய சில அடிப்படை பொதுக்கொள்கைகளை நிலைநிறுத்துவதும், அவைகளைப் பூரணமாக விளங்கிக்கொள்வதுமே, நாம் செய்ய அவசியமான முதலாவது காரியம் ஆகும்.

1. தேவன் நித்தியமானவர் (உபா. 33:27).

   இதன் பொருள் என்னவெனில், காலம், ஆரம்பம், முடிவு இவைகளைப்பற்றிய பொதுக் கொள்கைகள் தேவனுக்கு பொருந்துவது *இல்லை.* ஆரம்பமும் முடிவும் இருக்குமென்றால், தேவனது ஆரம்பத்திற்கு முன் ஒன்று இருந்ததாகவும், தேவனைவிட மிகப்பெரிய ஒன்று இருந்து, ஆரம்பத்தையும் முடிவையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். நித்தியமான தேவனைப்பற்றிய நமது பொதுக்கொள்கை, எல்லா ஆரம்பங்களும் எல்லா முடிவுகளும் அவராலேதான் சிருஷ்டிக்கப்பட்டதென்ற விளங்கிக்கொள்ளுதலை முழுமையாக உள்ளடக்கும்; எல்லா காலம், ஆரம்பம் மற்றும் முடிவின் முழு ஆதாரமும் தேவனே. காரியங்களை ஆரம்பத்தோடும் முடிவோடும் யோசிக்கும் மனித பழக்கம் என்பது, இடப்பரப்பு மற்றும் காலத்தினுடைய பௌதீக பயிற்சியின் காரணத்தினாலுண்டானதே. இடப்பரப்பும் காலமும் இல்லையென கற்பனை செய்யுங்கள் – அதுதான் தேவ பரிமாணத்தின் உண்மையான மண்டலமாகும்.

   தேவ பரிமாணத்தை நீங்கள் கற்பனை செய்து விளங்கிக்கொள்ள உங்களுக்கு உதவ நாங்கள் எத்தனிக்கிறோம். தேவன் அன்பாயிருக்கிறார் (1 யோவா. 4:8). குணாதிசயங்களாகிய அன்பு, மகிழ்ச்சி மற்றும் சமாதானம் என்பவைகள் நேரத்தையும் பரிமாணத்தையும் எங்கோ தாண்டிச் செல்கின்றன (1 கொரி. 13). அன்பு, மகிழ்ச்சி மற்றும் சமாதானம் இவைகள் தான் உண்மைத் தன்மையின் மெய்ப்பரிமாணங்களாக கற்பனை செய்யுங்கள். இடப்பரப்பும் காலமும் அன்பு பரிமாணம் என்ற பெரிய குமுவில் சிறியவைகளாக கற்பனை செய்யுங்கள். இடப்பரப்பும் மற்றும் காலமும் அன்பு பரிமாணத்தில் இருக்கும் உதவி – உண்மைத் தன்மைகளாகவே சிருஷ்டிக்கப்பட்டன. அன்பு பரிமாணத்திற்கு ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை. அது அப்படியே எப்பொழுதும் இருந்துகொண்டே இருக்கிறது. இடப்பரப்பு மற்றும் காலம் ஆகியவற்றின் பரிமாணம் சிருஷ்டிக்கப்பட்டபோது, அன்பு பரிமாணத்தை தங்களது மட்டுப்பாடுள்ள மற்றும் வளர்ச்சி அடையும் முன்னேற்ற வழிகளில் ஆராய்ந்து கண்டுபிடிக்க, எல்லா உயிருள்ள புலனறிவுள்ள ஜீவிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. சிருஷ்டியானது தங்களது மட்டுப்பாடுள்ள இடப்பரப்பு – கால பரிமாணத்தில், அன்பு பரிமாணத்தின் குணாதிசயங்களை விளங்கிக்கொண்டு அந்த அளவிற்கு மேம்பட, சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றுமே அன்பு

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

பரிமாணத்தின் சொல்வடிவங்களாகும். தேவன் நித்திய அன்பாயிருக்கிறார். அவர் ஒருபோதும் நம்மை நேசிப்பதை நிறுத்துவதேயில்லை.

2. தேவன் மாறாதவர் (எபி. 6:17, 18; யாக். 1:17)

தேவன் மாறுகிறவராயிருந்தால் முழு பிரபஞ்சத்திலும் அல்லது அவரது சிருஷ்டிப்பிலும் எந்த ஒரு உறுதித்தன்மையுமே இருக்காது, எல்லாமே மாறக்கூடியவைகளாய் போய்விடும். தேவனது *எல்லா* சிருஷ்டிப்பும் அவர் மேலும் அவரது மாற்றமுடியாத தன்மையின் மேலும் தங்கியிருப்பதால், அவரது சிருஷ்டிப்புக்கு விதிகளும் உறுதித்தன்மையும் உள்ளன. எல்லாமே மாறிவிடும் என்பது மனித வாழ்வின் ஒரு கூற்றாக உள்ளது. நேர மற்றும் இடப்பரப்பு பிரபஞ்சம் முழுவதிலுமே அது ஒரு மாறிலியாக உள்ளது. ஏதோ ஒன்றி*லிருந்து*தான் மற்றொன்*றிற்கு* எல்லா மாற்றங்களும் மாறவேண்டும். நாம் அறிந்திருக்கிற இந்த நேர – இடப்பரப்பு பிரபஞ்சமாகிய சிருஷ்டிப்பை, எல்லா மாற்றத்தின் ஆரம்பமாக கற்பனை செய்யுங்கள். தேவபரிமாணத்தின் அதேகால முடிவுத்தன்மையாக எல்லா மாற்றத்தின் முடிவையும் கற்பனை செய்யுங்கள். தேவனே ஆதியும் அந்தமுமாயிருக்கிறார், அல்பாவும் ஒமேகாவுமாய் இருக்கிறார். எல்லாமே தேவனில் ஆரம்பமாகி தேவனில் முடிகின்றன – அவர் மாற்ற முடியாதவர் மாறாதவர். நீங்கள் தேவனோடு உறவுகொள்ளும் போது, எல்லா முடிவுத் தன்மையின் ஜீவியோடு – மாறாத தேவனோடு – உறவுகொள்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

3. தேவன் ஒப்பற்றவர் அல்லது இணையற்றவர் – ஒரே ஒரு தேவன் மட்டுமே உள்ளார் (உபா. 6:4; 1 கொரி. 8:6).

அநேக தெய்வங்கள் இருக்குமானால், திட்ட அல்லது வல்லமை ஒருமைப்பாடு என்பதே இந்த முழு பிரபஞ்சத்திலும் இருக்கவே இருக்காது. ஒரே ஒரு தேவன் மட்டுமே உள்ளார், அவரைத் தவிர வேறொருவரும் இல்லை. தேவன் திரித்துவமாக இருப்பதை நமது புலனறிவு திறனால் அறிவது, நமது கால–இடப்பரப்பு பரிமாணத்திலிருந்து நமது புலனறிவுத் திறனால் உண்டானதே. கால–இடப்பரப்பு வெளிப்படுத்துதல்களின் முகப்புத் தோற்றத்திற்கு பின்னால், தேவன் ஒரே தேவனாகவே இருக்கிறார். திரித்துவத்தை நாம் ஒரு தனி அத்தியாயத்தில் பரீட்சித்துப் பார்க்கப்போகிறோம். ஆனால், இப்பொழுது ஒரே உண்மையான தேவன் மட்டுமே இருக்கிறார் என்றும் அவர் தன்னை பிதாவாகிய தேவனாக, வார்த்தையாகிய தேவனாக, பரிசுத்த ஆவியானவராகிய தேவனாக வெளிப்படுத்துகிறார் என்றும் நாம் அறிந்துகொள்வது அவசியமாகிறது. தேவன் ஒரே தேவனாக இருக்கிறார்.

பல தெய்வங்களையும் தேவதைகளையும் வழிபடும் மனுக்குலம், இயற்கை மனிதன் தெய்வங்களாக தனக்கு உண்டாக்கிக்கொண்டவைகளைவிட, அதிக வல்லமையுள்ள மற்ற சிருஷ்டிக்கப்பட ஜீவிகளை தவறாக வழிபட்டுள்ளனர். ஒரு தெய்வத்திற்கு அதிகமானவை களை வழிபடுபவர்களின் கலாச்சாரங்கள் மற்றும் மொழிகளில், ‘மிகவும் உயர்ந்த’ அல்லது ‘ஆதி ஆரம்பம்’ அல்லது ‘நிகரற்ற’ ஜீவி என்ற வார்த்தைகளின் ‘சொல்வடிவம்’ அல்லது ‘சொற்றொடர்’ மிகவும் அதிகமான எல்லா தெய்வங்களையும் விவரிக்கின்றன. ஒரே ஒரு ஜீவிக்கிற மெய்யான தெய்வம் மட்டுமே உள்ளார். மற்ற பல கலாச்சாரங்களில் அவர் மற்ற பெயர்களால் தெளிவற்ற நிலையில் அறியப்படலாம். ஆனால், ஒரு விசுவாசிக்கு நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனாக அவர் அறியப்படுகிறார்.

தேவனை மனிதனாக்கும் இயற்கையான மனோபாவம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. தேவன் நம்மைப்போலிருக்கிறார் அல்லது அவர் சாயலில் உண்டாக்கப்பட்டு நாம் அவரைப் போலிருக்கிறோம் என்று நாம் எப்போதுமே நினைக்கிறோம் (ஆதி. 1:27). ஒரு சாயல் என்பது எப்போதுமே 100% தேவ பிரதிநிதியாக இருப்பதில்லை. முழுமையான மட்டுப்பாடற்ற தேவன் எப்படி இருக்கிறார் என்பதன் மட்டுப்பாடுள்ள மனித நிலை பரிமாணத்தின் குறுகிய அளவு மட்டும்தான் அது. அவரைப்போல ஒருவருமே இல்லை, அவரைத்தவிர வேறொருவரும் இல்லை. கிறிஸ்துவின் மூலமாக மனித அளவு நிலையில் அவர் தனது வெளிப்படுத்துதலை நமக்கு காண்பித்தாலும் (அவர் மிகவும்

மகாபெரியவராயிருப்பதால், மட்டுப்பாடுள்ள நமது அளவு நிலைக்கு தனது வெளிப்படுத்துதலை தமக்கு காண்பிக்க, கிறிஸ்து தனது எல்லா மகிமையையும் பின்னால் விட்டுவிடவேண்டியிருந்தது – யோவா. 17:5; பிலி. 2:5–8). கிறிஸ்து மூலமாக தனது மனித வெளிப்படுத்துதலை நமக்கு காண்பித்ததை, அவருக்கு எல்லாமே அவ்வளவுதான் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாம்சத்தில் தனது வெளிப்படுத்துதலை நமக்குக் கொடுத்த மட்டுப்பாடுள்ள கிறிஸ்துவை யோசிக்காதபடிக்கு நாம் அறிவுறுத்தப்படுகிறோம். ஆனால், பிதாவின் முழுமையான மகிமையோடு இப்பொழுது மட்டுப்பாடற்ற கிறிஸ்துவாயிருக்கிறவரையே யோசிக்க வேண்டும் (2 கொரி. 5:16; யோவா. 17:5, 24).

தேவன், தேவன் மட்டுமே, ஒரே சுயமாய் தொடர்ந்து ஜீவிக்கும் ஜீவியாயிருக்கிறார். தேவன் அபூர்வமானவர். நமது உயிர் வாழும் வாழ்வே அவருக்கே உரிய ஆள்தத்துவம் மற்றும் ஆவியின் ஈவாயிருக்கிறது. ‘இருக்கிறவராகவே இருக்கிறேன்’ என்று மோசேக்கு அவர் தன்னை வெளிப்படுத்தினார் (யாத். 3:14 எபிரேய மொழியில் *ehyeh asher ehyeh* – **இருக்கிறவராகவே இருக்கிறேன்)** *ehyeh* என்ற எபிரேய வார்த்தை *hayah* என்ற எபிரேய வார்த்தையின் தன்மை என்ற இலக்கண அமைப்பாகும் *(to be, is/am/are* என்ற ஆங்கில வார்த்தையின் எபிரேய இணை வார்த்தைதான் *hayah* என்ற எபிரேய வார்த்தை). *Yahweh* என்ற வார்த்தையும் *hayah* என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. ஆனால், அது இலக்கணத்தில் படர்க்கை (மூன்றாம் நபர்) ஒருமை அமைப்பிலுள்ளது (ஆங்கில இணையான வார்த்தை *He is)* I AM இருக்கிறேன் மற்றும் *Yahweh* யாவே இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் பெயரில் இல்லை. ஆனால், கண்ணோட்டத்தில் உள்ளது: தன்மை (முதல் நபர் அல்லது பேசுபவர்) அல்லது படர்க்கை (மூன்றாம் நபர் அல்லது பேசப்படுபவர்). இது GOD WHO IS (தேவன் எப்படி அல்லது யாராக இருக்கிறார்) என்பதன் விளக்க விவரிப்பாகும். I AM சுயமாய் இருக்கிறவராக இருக்கிறேன் அல்லது HE IS அவர் சுயமாய் இருக்கிறவராக இருக்கிறார்.

4. தேவன் பௌதீக அல்லது உலக பொருட்கள் சம்பந்தப்பட்டவரல்ல மற்றும் தனது சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர் (எபி. 11:3; ரோம. 1:20). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவா. 4:24).

தேவன் தனது பொருட்களின் அல்லது சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தின் ஏதாவது ஒரு பகுதியாக இருப்பாரானால், அவைகளுக்கும் அவர் உட்பட்டவராகவே இருப்பார்; இவ்வாறு அவரது சிருஷ்டிப்புக்கு மேலாகவும் அப்பாலும் அவர் இருக்க வேண்டும். சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சத்தின் ஒரு பகுதிப் பொருளாக இருக்க முடியாது. அவரது ஜீவன் முழு பிரபஞ்சத்தையும் நிரப்பி தாங்கி வழிநடத்தினாலும், அவர் தானே தனது சிருஷ்டிப்புக்கு மேலாகவும் அப்பாற்பட்டவராகவும் இருக்கிறார். இயற்கையோ அல்லது சிருஷ்டிக்கப்பட்ட எதுவானாலும் இயற்கை மற்றும் சிருஷ்டிப்போடுள்ள இசைவின் விதிகளை நாம் விளங்கிக் கொள்ள, வல்லமையுள்ள வலிமையை செயல்படுத்திக் காட்டக்கூடியதாய்க் காணப்பட்டு, உரிமையுடன் கேட்பதுபோலக் காணப்படுமானால், தேவனே சுயமாய் தங்களைத் தாங்கிக் கொள்ளும் வலிமையை தனது சிருஷ்டிப்புக்குள்ளே வைத்திருப்பதினால் மட்டுமே அது நடைபெறுகிறது. அதுமட்டுமல்லாமல், அவைகளை தனது சிருஷ்டிக்கப்பட்ட தேவதூதர்கள் அல்லது சிருஷ்டிக்கப்பட்ட ஆவி ஜீவிகளின் பொறுப்பில் தேவன் அவைகளை ஒப்புக் கொடுத்ததினாலுமே நடைபெறுகிறது. அவர், அவர்தானே தனது சிருஷ்டிப்புக்கு உயர் வாகவும், அப்பாலும் எப்பொழுதுமே இருக்கிறார். அவரது சிருஷ்டிகள் ஜீவனையும் வெளிச்சத்தையும் அவரிடத்திலிருந்தே அடைந்துகொள்கின்றன. ஆனால், அவரோ எப்பொழுதுமே தனது சிருஷ்டிகளைவிட்டு தன்னைப் பிரித்துக்கொள்கிறார். அவரது எல்லா சிருஷ்டிகளும், நாம் அவரை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளக்கூடிய நிலையில் அவரது குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறவைகளாக மட்டுமே உள்ளன.

5. தேவன் அதிநிச்சய உறுதியான அன்பாகவும், நன்மையாகவும், இரக்கமாகவும், கிருபையாகவும் இருக்கிறார் (1 யோவா. 4:8; யாத். 34:6; எபி. 4:16).

தேவன் முழுமையாயன அன்பாகவும், பரிபூரணமாகவும், ஞானமாகவும், நீதியாகவும் மற்றும் நாம் நினைத்துப்பார்க்கக்கூடிய நற்குணம், இரக்கம், இவைகளின் எல்லா

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பொதுக் கருத்துக்களின் எல்லாவற்றையும் உடையவராயிருக்கிறார் – இந்தப் பொதுக்கருத்துக்கள், முதலாவது தேவன் யாராயிருக்கிறார் என்ற குணாதிசயத்திலிருந்து ஆரம்பமாகிறது (1 யோவா. 4:8–19; மத். 5:48; மாற். 10:18). அன்பு பரிபூரணம், நற்குணம், நீதி மற்றும் இரக்கத்தின் எல்லா அளவுகளுமே, தேவனோடு ஒப்பிட்டுப்பார்க்கும் ஒப்பணையின்மேல் அடிப் படையாயிருக்கிறது. அவர்தான் இந்த குணாதிசயங்களின் உண்மையான அளவாயிருக்கிறார்.

தேவன் ஒளியாயிருக்கிறார். அவரது ஒளியிலிருந்துதான் நாம் எல்லாவற்றையும் நமது புலனறிவுத் திறனால் அறிந்து உணர்ந்து கொள்கிறோம். நாம் காண்பதற்கு பௌதீக ஒளி தேவைப்படுவதுபோல், எண்ணங்களைப் பெற்றுக்கொள்ளவும் சிந்தித்து அறிந்துகொள்ளும் வாழ்வை வாழவும் நமக்கு சக்தியளிக்க, தேவ ஒளி நமக்குத் தேவைப்படுகிறது. தேவனே நாம் சிந்தித்து அறிந்துகொள்ளும் ஆற்றலின் ஆரம்ப இடமாக இருப்பதால், அவர் எப்பெழுதுமே நமது மிகவும் உயர்வான எண்ணம், நமது மிகவும் உயர்வான பொதுக் கொள்கை, நமது மிகவும் உயர்வான ஏவி எழுப்பப்படும் தன்மை ஆகியவைகளுக்கு மிகவும் உயர்ந்தவராகவே இருக்கிறார். தேவனோடு சம்பந்தப்பட்டு மட்டுமே எல்லாப் பொருட்களும் இருக்கின்றன. நமது சமயசந்தர்ப்ப அறநெறியின் பொதுகொள்கைகளும், சரி மற்றும் தவறின் பொதுக்கொள்கைகளும், வேதாகம கொள்கைகளின் அதிநிச்சய உறுதிகளுக்கு உட்பட்டதாகவும், அவைகளால் அளவிடப்பட வேண்டியவைகளாகவும் உள்ளன.யோசிக்கவும் அறிந்துகொள்ளவும் நமக்கு ஆற்றலைக் கொடுத்தவராகிய அவரது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக நமது பொதுக்கொள்கைகளும் அறிவும், ஒருபோதும் இருக்கவே முடியாது. தேவனே எல்லா அதிநிச்சய உறுதிகளுக்கும் அதிநிச்சய உறுதியாயிருக்கிறார். அவரே பரிபூரணம், அன்பு, நீதி, ஞானம் மற்றும் நாம் யோசிக்கக்கூடிய ஒவ்வொன்றினுடைய மிகவும் உயர்வான பொதுக்கொள்கை களினுடைய பரிபூரணமாகவும் உருவகமாகவும் உள்ளார்.

தேவனை நித்தியராகவும், மாறாதவராகவும், அபூர்வமானவராகவும், உலகபொருட்களுக்கு அப்பாற்பட்டவராகவும், அவரது சிருஷ்டிகளுக்கு அப்பாற்பட்டவராகவும், நமது மிகவும் உயர் வான பொதுக்கொள்கைகள் மற்றும் அதிநிச்சய உறுதிகளின் உருவகமாகவும் அறிந்து கொள்வது நமக்கு எப்படி உதவுகின்றன?

தேவன் நித்தியமானவர், நாம் இம்மைக்குரியவர்கள்; அவருக்குள் நாம் வாழ்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம், அவராலன்றி நாம் ஒன்றுமில்லை, நீராவியைப்போலவும் புகையைப்போலவும் இருக்கிறோம் (அப். 17:28; யோவா. 15:5; யாக். 2:26; 4:14). காணப்படுகிறவைகளை நாம் பார்க்கிறவர்களல்ல ஆனால், காணப்படாதவைகளையே பார்க்கிறோம்; காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள். ஆனால், காணப்படாதவைகள் நித்தியமான வைகள் (2 கொரி. 4:18).

தேவன் மாறாதவர் ஆனால் நாமோ மாற்றத்திற்குட்பட்டவர்கள்; அவர் நமது கன்மலை, அவரே நமது பெலன், அவரில் மட்டுமே நாம் நம்புகிறோம் (2 சாமு. 22:1–2). அவரது மாற்ற முடியாத நபர் மற்றும் மாற்ற முடியாத வார்த்தைகளால், அவரது வாக்குத்தத்தங்கள் நமக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளன (எபி. 6:17–18).

தேவன் அபூர்வமானவர், அவரைப்போல் வேறொருவரும் இல்லை. தேவன் நம்மை நேசிக் கிறதுபோல நம்மை நேசிக்க யாருமில்லை, இயேசு நேசிக்கிறதுபோல நம்மை நேசிக்க யாரும் இல்லை; நாம் அவரை நேசிப்போம், ஒருவரை ஒருவரும் நேசிப்போம். நமது முழு இருதயத்தோடும், முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அவரை நேசித்து, தன்னிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல பிறனிடத்திலும் அன்பாயிருப்பது என்பது, தகனபலிகள், பலிகள் *எல்லாவற்றையும் விட* அதிகமானதாகும் (ஏசா. 46:9–10; யோவா. 3:16; ரோம.5:8; மாற். 12:32–33). அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்ததினால், நாமும் அன்பு கூருகிறோம் (1 யோவா. 4:11, 19).

தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையயோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் (யோவா. 4:24). நமது ஆராதனையானது நேரம் இடம், இனம், கலாச்சாரம், விசுவாசப்பிரமாணம் மற்றும் எந்த ஒரு

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வெளிப்பிரகாரமான அமைப்பையும் சார்ந்ததல்ல (யோவா. 4:21–23). நமது ஆராதனை என்பது நமது இருதயங்கள் மற்றும் ஆவிகளின் உள்ளேயிருக்கும் ஆழத்திலிருந்து தொடர்ந்து பிரவாகிப்பதாகும் – ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது (சங். 42:1, 7). ஆவியாயிருக்கிற தேவனுக்கு, தொடர்ந்து துதியும் ஆராதனையும் நமது ஆவிகளிலிருந்து புறப்படும் (யாத். 29:42; சங். 34:1; 1 தெச. 5:16–18; எபி. 13:15).

தேவன் நற்குணத்திலும் சத்தியத்திலும் நிறைந்திருப்பவராகவும், இரக்கம், கிருபை, நீடிய சாந்தம் இவைகளின் அதிநிச்சய உறுதியின் சொல்வடிவமாயும் உருவகமாயுமிருக்கிறார்; நம்மைப்பற்றி அவரது எல்லா எண்ணங்களும் எல்லா திட்டங்களும் நன்மைக்கேதுவானவை கள் மட்டுமே என்று மிகவும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும் (யாத். 33:6; எரே. 29:11). அவரது எண்ணங்களும் வார்த்தைகளும், நமக்கு ஆசீர்வாதத்தையும் நன்மையையும் மட்டுமே நமக்குக் கொண்டுவரும் (ஏசா. 55:8–13). அவருக்கு முன்பாக ஒரு சிறு குழந்தையைப் போலிருக்க நாம் கற்றுக்கொள்வது அவசியம். தேவன் மிகவும் நல்லவர் என்று மீண்டும் ஒருமுறை கற்றுக்கொளவது அவசியம்.

**(தேவனைப்பற்றிய உபதேசங்களின் அடுத்த அத்தியாயத்திற்குப் போகுமுன்பு, ‘இயேசு நல்லவர்’ என்ற இனிமையான ஞாயிறு பள்ளி பாடலை பாடுவதோ முணுமுணுப்பதோ ஏற்றதாயிருக்கும் ☺).**

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*அத்தியாயம் 2*

# திரித்துவத்தை விளங்கிக்கொள்ளுதல்

திரித்துவ (பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர்) உபதேசத்தின் ஆரம்பமானது, கிறிஸ்துவத்தின் முதல் ஆயிரம் ஆண்டுகளில், பிரதானமாக விசுவாசப் பிரமாணங்களிலிருந்து வந்தது. விசுவாசப்பிரமாணம் என்பது விசுவாச வாக்குமூலத்தைப் போன்றது; எல்லாரும் பொதுவாகப் பயன்படுத்துவதற்காக, இது விசுவாசத்தின் அறிக்கையாகும். அல்லது, விசுவாசத்தின் இல்லாவிட்டால் நம்பிக்கையின் சில ஷரத்துக்களுள்ள அதிகாரத்துடன் கூடிய வார்த்தைகள் ஆகும். அதிகமான உபதேச கருத்துவேறுபாடுகள் ஆதித்திருச்சபையில் இருந்தன. எனவே ஆதித்திருச்சபைப் பிதாக்களும் தலைவர்களும், பரிசுத்த வேத எழுத்துக்களில் அவர்கள் அறிந்தபடி, சத்தியத்திற்கும் தவறுகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்திற்கு விசுவாசப் பிரமாணத்தை நேர்வழிப்படுத்த வேண்டியதிருந்தது.

### *அப்போஸ்தலர்களின் விசுவாசப்பிரமாணம்*

ஆதிமுதலாவதாக ஏற்படுத்தப்பட்ட பிரமாணமே, அப்போஸ்தலர்களின் விசுவாசப் பிரமாணமாகும். அதை, கிறிஸ்து பரமேறியதிலிருந்து பத்தாவது நாளிலே அப்போஸ்தலர்கள் எழுதினார்கள் என்ற ஒரு புராணக் கதையுமுண்டு (மத். 16:16ல் உள்ளபடி கிறிஸ்துவைப்பற்றிய பேதுருவின் அறிக்கையிலிருந்து வந்தது). ஆனால், பெரும்பாலும் இது உண்மையல்ல. கிறிஸ்துவத்தின் முதலாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இது உண்டாயிருந்திருக்க வேண்டும். ஆதிப் பிரதி கிபி 215ல் கண்டுபிடிக்கப்பட்டது *(Interrogatory creed of Hippolytus)* இன்றைக்கு நாம் பயன்படுத்தும் இந்த அமைப்பு சுமார் கிபி 542லிருந்து வந்துள்ளது *(Caesarius of Arles).* தாங்கள் விசுவாசித்த ஒவ்வொரு கூற்றையும், ஞானஸ்நானத்தின் போது, ஞானஸ்நானம் எடுப்பவர்கள் உறுதியாக பதிலளித்தது போல பயன்படுத்தப்பட்டுள்ளது.

விசுவாசப் பிரமாணத்தின் <u>பாரம்பரிய</u> ஆங்கில மொழிபெயர்ப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது (*கேத்தலிக்* என்ற ஆங்கில வார்த்தை ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைக் குறிக்காமல், மாறாக, *அகில உலக* திருச்சபை என்பதே அதன் அர்த்தமாகும்):

வானத்தையும் பூமியையும் படைத்த, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவா சிக்கிறேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் பரிசுத்த ஆவியானவராலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார், பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையிலறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளதில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்திற்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்; பொதுவான பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களின் ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

நவீன ஆங்கில மொழிபெயர்ப்பு (பாதாளம் என்ற வார்த்தைக்கு சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை கவனியுங்கள்; *hell – Greek Katotata – kato* என்பதன் பொருள் *அடியிலே* அல்லது *கீழே* என்பதாகும். *tata* என்பது *tartarus* or Hades *கீழே* என்பதன் சுருக்க வார்த்தை ஆகும்) பின்வருமாறு:

நமது கர்த்தரும் தேவனுடைய ஒரே குமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்,
அவர் பரிசுத்த ஆவியானவரால்,
கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்,
அவர் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு,
சிலுவையிலறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார்;
அவர் மரித்ததோரிடத்திற்கு இறங்கினார்.
மூன்றாம் நாளில் மீண்டும் எழுந்தருளினார்;
பரமண்டலத்திற்கேறி,
பிதாவின் வலதுபரிசத்திலே வீற்றிருக்கிறார்,
உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க அவர் திரும்பவும் வருவார்.

பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறேன்,
பொதுவான பரிசுத்த சபையும்,
பரிசுத்தவான்களின் ஐக்கியமும்,
பாவமன்னிப்பும்,
சரீரம் உயிர்த்தெழுதலும்,
நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்!

விசுவாசப் பிரமாணங்களை மகிழ்ந்து படிப்பவர்களின் விருப்பத்திற்காக, இந்த புத்தகத்தின் பின்சேர்க்கைப் பகுதியிலே, கையெழுத்துப் பிரதிகளின் லத்தின், புதிய ஏற்பாட்டு கிரேக்க மொழி, மற்றும் பிரெஞ்சு மொழிபெயர்ப்புகளை கொடுத்துள்ளோம். முதலாம் நூற்றாண்டில் உண்டான அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணத்தோடு, எட்டாம் நூற்றாண்டின் பல பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ள இப்போதைய விசுவாசப் பிரமாணமானது, மார்சியோனைட் துர் உபதேசத்திற்கு உண்டான ஆதி பிரதி நல்வினையாக காணப்படுகிறது (தேவனும் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவும், எபிரேய பழைய ஏற்பாட்டு தேவனைப்போல ஒருவரல்ல, அவர் நல்ல தேவனின் குமாரன், என்று மார்சியோனைட்ஸ் போதித்தார்கள்).

*நிசேயா விசுவாசப்பிரமாணம்*

ஏறக்குறைய நான்காம் நூற்றாண்டில், ஏரியன் துர்உபதேசம் என்னுமொரு உபதேச முரண்பாடு, பிதாவாகிய தேவனுக்கும் இயேசுவுக்கும் இடையேயுள்ள உறவைப் பற்றி எழுந்தது. பிதாவாகிய தேவனுக்குக் கீழே அல்லது குறைவான நிலையில் உருவாக்கப்பட்ட ஜீவிதான் இயேசு என்று ஏரியன் துர்உபதேசம் போதித்தது. ஆசியாமைனரில் கிபி 325ல் கூடிய நிசேயா கவுன்சில் இந்த உபதேச முரண்பாட்டை சீர்செய்தது. இந்த நிசேயா விசுவாசப் பிரமாணம் (கான்ஸ்டான்டிநோபிலில் கூடிய முதல் கவுன்சில்) அதிகாரப்பூர்வமாக சுமார் கிபி 381ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதோடு தெய்வீக சுபாவத்தை விவரித்து தெளிவாய் விளக்க ஆரம்பித்தது. இது திரித்துவ உபதேசத்தின் முன்னேற்ற வளர்ச்சிக்கு நேராய் வழிவகுத்தது. இப்போதிருக்கும் அமைப்பில் நிசேயா விசுவாசப் பிரமாணம் பின்வருமாறு சொல்கிறது.

வானத்தையும் பூமிமையயும்,
அவைகளில் காணப்படுகிறவைகளையும் காணப்படாதவைகளுமாகிய எல்லாவற்றையும் உண்டாக்கிய,

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய,
ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்.

பிதாவினால் நித்தியமாக ஜெனிப்பிக்கப்பட்டு,
தேவனுடைய ஒரே குமாரனாகிய
ஒரே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறோம்.
அவர் தேவனில் தேவனானவர், ஒளியில் ஒளியானவர்,
மெய்தேவனில் மெய் தேவனானவர்,
உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர்,
அவர் பிதாவோடு ஒன்றாயிருக்கிறார்,
அவரால் எல்லாம் உண்டாக்கப்பட்டன.
நமக்காகவும் நமது இரட்சிப்பிற்காகவும்
பரமண்டலத்திலிருந்து இறங்கி வந்த அவர்,
பரிசுத்த ஆவியானவராலும், கன்னிமரியாளாலும் (மனிதனாய் அவதரித்து),
மெய்யான மனிதனானார்.
நமக்காக பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையிலறையப்பட்டார்;
அவர், மரண பாடுபட்டு அடக்கம்பண்ணப்பட்டார்.
வேதவாக்கியங்களின்படி
மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தருளினார்;
பரமண்டலத்திற்கேறி
பிதாவின் வலதுபரிசத்திலே வீற்றிருக்கிறார்.
உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க திரும்பவும் வருவார்,
அவரது இராஜ்யத்திற்கு முடிவிராது.

தீர்க்கதரிசிகள் மூலமாய் உரைக்கப்பட்டு, பிதாவினிடத்திலிருந்து (குமாரனிடத்திலிருந்தும்) புறப்பட்டு, பிதாவோடும் குமாரனோடும் ஆராதிக்கப்பட்டு மகிமைப்படுத்தப்பட்ட வாழ்வளிக்கும் கர்த்தராகிய பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கிறோம்.
ஒரே பரிசுத்த பொதுவான சபையையும், அப்போஸ்தல சபையும் உண்டென்று விசுவாசிக்கிறோம்.
பாவ மன்னிப்புக்கென்று ஒரே ஞானஸ்நானத்தை விசுவாசிக்கிறோம்.
மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலையும்
இனிவரும் உலகின் வாழ்வையும் எதிர்பார்க்கிறோம். ஆமென்.

அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம் நிசேயா விசுவாசப்பிரமாணத்தின் விரிவாக்கமே என்பதை நீங்கள் உடனடியாக்கக் காணக்கூடும். ஏனெனில், தேவன் யார் என்பதைப் பற்றிய சத்தியத்தை தெளிவாக்கவே அது நாடுகிறது; மற்றும் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் ஆகியோரின் நிலை. கிபி 415ல் சால்சிடோன் கவுன்சில், பரிசுத்த ஆவியானவரின் உண்மையான தெய்வீகத்தை உறுதிப்படுத்தி, நிசேயா விசுவாசப் பிரமாணத்தில் மிகச் சிறிய மாற்றங்களை உண்டாக்கியது. நிசேயா விசுவாசப்பிரமாணத்தோடு சேர்க்கப்பட்ட filioqu[1] சொற்றொடர் கிபி 589ல் மேற்கத்திய ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கும், கிழக்கத்திய வைதீக திருச்சபைக்கும் இடையே பிளவை ஏற்படுத்தினது. கிழக்கத்திய வைதீக திருச்சபையானது, பரிசுத்த ஆவியானவர் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டார் என்றும் (பெந்தெகொஸ்தே

[1] *filioque* clause *(filio* meaning *from the son,* while *que* mean *and* in Latin)
filioque சொற்றொடரில் (பிலியோ என்றால் *குமாரனிடமிருந்து* என்றும், *que* என்றால் லத்தீன் மொழியில் *and* என்றும் பொருள்)

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

நாளன்று) பிதாவினிடத்திலிருந்து குமாரன் மூலமாக *(ex patre per fitium procedit)* அனுப்பப்பட்டார் என்றும் கருதியது. ரோமன் கத்தோலிக்க திருச்சபையோ பிதா மற்றும் குமாரனிடத்திலிருந்து சமமாக புறப்பட்டார் என்று செய்கிறது *(ex patre filioque procedit).*

*Filioque* சொற்றொடரை தெரிந்தெடுத்து பின்பற்றுவதினால், கிழக்கத்திய திருச்சபை ரோமன் கத்ததோலிக்க திருச்சபையை துர்உபதேச திருச்சபையாகவே கருதுகிறது. இந்தக் கருத்து வேறுபாடு, அந்த திருச்சபையை ஒப்புரவாக்கிக்கொள்ள எடுக்கப்பட்ட இரண்டு ஆயிரம் வருடங்களின் பல முயற்சிகளை தடுத்துவிட்டது. தனது மகா அரசியல் வல்லமையாலும் செல்வாக்காலும் (பரிசுத்த ரோம சாம்ராஜ்யம்) ரோமன் கத்தோலிக்க சபையின் உபதேச நிலையானது, தேவனைப் பற்றிய உபதேச விளங்கிக்கொள்ளுதலின் அதிகமான புதிய முறைப்படுத்தப்பட்ட கூற்றுகள் ஆகியவற்றிற்கு, குறைவுள்ள அஸ்திபாரமானது. மதசார்பாற்ற வரலாற்றில், யுத்தகத்தில் வெற்றி பெற்றவர்கள் அடிக்கடி தங்களது கண்ணோட்டத்திற்கேற்ற படி வரலாற்றை திரும்ப எழுதியுள்ளனர்; கடைசியாக இருந்த செல்வாக்கான திருச்சபை, திருச்சபை வரலாற்றிலும் அடுத்த தலைமுறையின் உபதேச நிலைக்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதுவும் நவீன திருச்சபை வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டில் முற்றிலும் பரிசுத்தமாகுதலின் 'முடிவுற்ற வேலையின் கோட்பாடுகளை' வைத்துக்கொண்ட பலமான பெந்தெகொஸ்தே குழுக்கள், முற்றிலும் பரிசுத்தமாகுதலின் 'இரண்டாம் ஆசீர்வாத கோட்பாடுகளை' வைத்திருந்த சிறிய குழுக்களுக்கு எதிரான, அதிகப்படியான பெந்தெகொஸ்தே சக்தியாக மாறியது (அத்தியாயம் 3ல் முற்றிலும் பரிசுத்தமாகும் உபதேசம் கையாளப்பட்டுள்ளது).

### *அத்தனாசிய விசுவாசப்பிரமாணம்*

கிபி 293–373 வரை வாழ்ந்த அத்தனாசியஸ் ஆரியனிசத்திற்கு எதிரான வைதீகத்திற் காக போராடுபவராக இருந்தார். அத்தனாசியஸ் அத்தனாசிய விசுவாசப்பிரமாணத்தை எழுதவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டில் அவருடைய பெயரில் தவறாக அது வழங்கப்பட்டது. ஆனால், இது பற்றிய உரிமை கொண்டாடல் ஏழாம் நூற்றாண்டிலேயே புறக்கணிக்கப்பட்டது. அது லத்தீன் மொழியில் எழுதப்பட்டிருப்பதால், ஏறக்குறைய ஐந்தாம் நூற்றாண்டில் கால் என்ற இடத்தில் இது ஆரம்பமாயிருக்கலாம் என்று எண்ணப்பட்டது. மேற்கத்திய திருச்சபைகள் ஆறாம் நூற்றாண்டில் இதைப் பயன்படுத்தியுள்ளார்கள். முதற் பகுதியில் இந்த விசுவாசப் பிரமாணம் திரித்துவத்தை விளக்கம் கொடுத்து விவரிக்கிறது. இரண்டாம் பகுதியில் பிரதானமாக மனுடவதாரத்தை யும், கிறிஸ்துவின் இரண்டு தன்மைகளையும் விளக்குகிறது. அத்தனாசிய விசுவாசப் பிரமாணத்தின் வார்த்தைகள், இந்தப் புத்தகத்தின் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. இன்றைய திருச்சபைகளில் திரித்துவ உபதேசம் உறுதியாக்கப்பட்டிருப்பது, அத்தனாசிய விசுவாசப் பிரமாணத்தின் உபயோகமும் அது பரவி பெருகியிருந்ததுமே காரணமாகும்.

இருபதாம் நூற்றாண்டில், பெந்தெகொஸ்தே விசுவாசிகளுக்கிடையே திரித்துவ உபதேச விளங்கிக்கொள்ளுதலைப் பற்றி வாக்குவாத எழுப்புதல் உண்டாயிருந்தது. *'பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே'* (மத். 28:19) என்று பாரம்பரியமாய் கடைப்பிடிக்கப்பட்ட ஞானஸ்நான ஒழுங்கோடுதான் இது ஆரம்பமானது. புதிய "Oneness Movement" "ஒருத்துவ இயக்கம்" அப்போஸ்தலர் நடபடி புத்தகத்திலுள்ள *'இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே'* (அப். 2:38; 4:10–12; 8:12; 10:43, 48; 19:4–5) ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அது வெறும் ஞானஸ்நான ஒழுங்கைப்பற்றிய முரண்பாடாயிருக்குமானால், மத்தேயு மற்றும் அப்போஸ்தலர் நடபடி புத்தகத்திலுள்ள பகுதிகளை ஒன்றிணைத்து *'பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்திற்குள், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே'* ஞானஸ்நானம் கொடுத்து இதற்கு சுலபமாக தீர்வு கண்டிருக்கலாம்.

Oneness Movement ஒருத்துவ இயக்கத்திற்கும் பாரம்பரிய திரித்துவ கருத்திற்கும் இடையே இருந்த முரண்பாடு, தேவனைப்பற்றிய உபதேசமாகும். அடிப்படையில், திரித்துவத்தை நம்புபவர்கள், தேவன் மூன்று நபர்களாகவும் ஆனால் ஒரே தேவனாகவும் இருப்பதை

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

விசுவாசிக்கின்றனர். Oneness Movement ஒருத்துவ இயக்கத்தினர், தேவன் மூன்று வெளிப்படுத்துதல்களில் இருக்கிறார் என்றும், ஆனால் ஒரு நபராயிருப்பதால் ஒரே தேவன் என்றும் விசுவாசிக்கின்றனர். இந்த இரு அபிப்பிராயங்களிலும் உள்ள பிரச்சனை என்ன வென்றால், காரணகாரிய முடிவுக்கு அதன் கருத்தை இழுத்தால், அது தவறாக மாறி ஒருபுறச்சாய்வுக்கு சென்றுவிடும். உதாரணமாக, தேவன் மூன்று நபராயிருக்கிறார் (பன்மைத்துவம்) என்ற கருத்தை விருத்தியடையச் செய்து ஒருபுறச்சாய்வுக்கு இழுத்தால், (விசேஷமாக, தேவன் என்பதற்கு எபிரேய ஒருமை வார்த்தை *El* என்பதற்கு பதிலாக, பன்மை வார்த்தையாகிய *Elohim* என்ற எபிரேய வார்த்தையை பயன்படுத்தும்பொழுது) மூன்று தெய்வங்கள் ஒருங்கிணைந்து இசைவாக செய்தாலும், மூன்று வித்தியாசமான வேலைகளோடு மூன்று தெய்வங்கள் என்ற கருத்து உருவாக்கத்திற்கு ஒருவர் செல்ல நேரிடும். அதே வேலையில், ஒரு நபர் மூன்று வெளிப்படுத்துதல்கள் என்ற எதிரான கருத்தை விருத்தியடையச்செய்தால், இப்பிரபஞ்சத்தின் தேவனாக, அவரது சர்வ வல்லமைத் துவத்தையும் அவரது மாட்சிமையையும் ஒருமைத்துவ நபர் அவரது வேலைப் பங்கில் பல வேலை செய்பவராக மட்டுப்படுத்தப்படுகிறார்; அப்படியானால் எவ்வாறு அவர் மூன்று முழுமை யான அதே நேரத்தில் வித்தியாசமான நபர்களாக தோன்றுகிறார்? மற்றும் கிறிஸ்து சிலுவை யில் மரித்தபோது, அந்த ஒரு நபருக்கு என்ன நடந்தது? என்ற கேள்வி எழும்புகிறது.

### *திரித்துவத்தின் விளக்க உதாரணங்களும் விவரிப்பும்*

முதலாவதாக திரித்துவத்தின் பெருந்தாக்க விளைவு *தெய்வீகம்* என்ற வார்த்தையின் வேத உபயோகத்தில் உள்ளது என்பதை நாம் விளங்கிக்கொள்ளளன வேண்டும் (கிரேக்க மொழியில் *theios, theiotes, theotes* – அப். 17:29; ரோம. 1:20; கொலோ. 2:9). இரண்டாவதாக, நமக்கு புரட்சிகரமாக புது திருப்ப சிந்தனை அல்லது கண்ணோட்டம், புதிய வார்த்தைகள், மற்றும் திரித்துவத்தை விவரிக்கும் புதிய வார்த்தைகளையும் நாம் கண்டு பிடிக்க வேண்டும். உதாரணமாக, வெளிப்பாட்டு புத்தகத்தில், யோவான் இயேசுவை அவருடைய மகிமையில் பார்த்தபோது, அவருடைய வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டதாக அவரைப் பற்றி விவரித்தார் (வெளி. 1:16). தரிசனங்களில் அவரைப் பார்த்ததினால் கூட, அவருடைய வாயிலிருந்து லேசர் ஒளிக்கற்றை களைப்போன்ற வெளிச்சம் புறப்பட்டது என்பதாக அதி நவீன விவரிப்பு இருக்க வேண்டும். லேசர் ஒளிக்கற்றைகள் இன்னும் கண்டுபிடிக்கப்படாததால், இருபதாம் நூற்றாண்டின் கண்டுபிடிப்புகளுடன் அவர் பார்த்ததை, அப்போஸ்தலனாகிய யோவான் விளக்க உதாரணம் கொடுக்க முடியவில்லை. திரித்துவத்தை விவரிக்க ஆங்கில மொழியில் இரண்டு வார்த்தைகளை நாம் ஒன்றிணைக்க வேண்டும்: *பரிமாணம்* என்ற வார்த்தையை (கணிதத்திலும், விஞ்ஞானத்திலுமிருந்து அதன் பயன்பாட்டை கடனாக பெற வேண்டும்) பெற்று *தேவ–நபர்* என்ற புதிய வார்த்தையை உருவாக்க வேண்டும் (நமது வரையறையின் அர்த்தமென்னவெனில், தேவ–நபர் என்பது எல்லையற்று பல பெருக்க பரிமாணங்களில், அதோடு ஒரே நேரத்தில் மட்டுப்பாடற்று, அவரில் பல பெருக்க நபர்களை வெளிப்படுத்த முடியும் – இடப்பரப்பு மற்றும் நேர உண்மைத்தன்மையில், ஒரு அலகு உணர்வுத்தன்மையாக முடிவோடு அல்லது எல்லையோடு இருக்கும் சாதாரண ஒரு நபருக்கு எதிரானது).

திரித்துவத்தை விளங்கிக்கொள்ள, முதலாவதாக, பாரம்பரிய விளக்க உதாரணங்களையும் மற்றும் நேர் ஒப்பு உவமையையும் நாம் பயன்படுத்தி, பிறகு பிழையில்லாத சரித்தன்மையி னுடைய சாத்திய விழுக்காடின் வார்த்தைகளால், திரித்துவத்தின் பிரதிநிதித்துவத்தினுடைய பலவீனத்தின் பகுப்பாய்வைக் கொடுப்போம்:

#### *திரித்துவத்தின் தண்ணீர் விளக்க உதாரணம் – 20% பிழையில்லாத சரித்தன்மை*

திரித்துவத்திற்கு தண்ணீர் அல்லது $H_2O$ மூன்று நிலையாக இருப்பதை அடிக்கடி விளக்க உதாரணமாக்கப்பட்டுள்ளது: திட பனிக்கட்டி, திரவ தண்ணீர், நீர் ஆவி. ஒருமைத்தன்மைக் கும் அதே நிலை தன்மைக்கும் இதன் விளக்க உதாரணம் தவறல்ல. ஒரு நபர் மூன்று வெளிப் படுத்துதல்கள் என்ற விளக்க உதாரணத்திற்கு அது வியாக்கியானம் செய்வதற்கு உதவும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

*திரித்துவத்தின் வேலைவிவரிப்பு – 20% பிழையில்லாத சரித்தன்மை*

இந்த விளக்க உதாரணத்தில், பொறியாளராக வேலைசெய்யும் நபர் ஒருவர், உதாரணமாக நமக்கு இருக்கிறார். வீட்டில் அவரது மனைவிக்கு அவர் கணவனாகவும், அவரது பிள்ளைகளுக்கு தகப்பனாகவும் இருக்கிறார். இவ்வாறு, அதே ஒரு நபர் மூன்று வேலைப்பங்குள்ளவராக இருப்பதை நாம் விளக்க உதாரணமளிக்கிறோம்: பொறியாளர், கணவர், தகப்பனார். இந்த விளக்க உதாரணம் தேவன் ஒரு நபராயிருக்கிறதை படம்பிடிப்பதில் மிகவும் உறுதியாயிருந்தாலும், மூன்று நபர்களின் விளக்க உதாரணத்தில் பலவீனமாயிருக்கிறது. ஒரு நபர் பல்நோக்குவேலைகள் என்பதை அதிகமாகக் காட்டுகிறது.

*திரித்துவத்தின் சூரிய விளக்க உதாரணம் – 30% பிழையில்லாத சரித்தன்மை*

சூரியன், பிதாவாகிய தேவனின் ஒரு படமாகவும், சூரியன் ஒளியாக இயேசுவும் மற்றும், சூரியனின் வெப்பமாக பரிசுத்த ஆவியானவரும் சூரியனின் விளக்க உதாரணமாக்கப்பட முடியும். ஒரே நேரத்தில் அதே நிலைத்தன்மையும் வித்தியாசப்படுத்துதலும் அது காண்பிப்பதால் இது ஒரு மிகவும் நல்ல விளக்க உதாரணமே. எனினும் இது ஒரு நபர் மூன்று வெளிப்படுத்துதல்கள் என எடுத்துக்கொள்ளப்பட முடியும். ஆனால், சூரியன் முழுமையாக ஒளியினாலும் வெப்பத்தினாலும் உண்டாக்கப்பட்டிருப்பதால், உறவு மற்றும் ஒற்றுமை விளைவுகள் மிகவும் நேர்த்தியாக விளக்க உதாரணமாக்கப்பட்டுள்ளது.

*வீடு கட்டும் விளக்க உதாரணம் – 20% பிழையில்லாத சரித்தன்மை*

கட்டப்பட வேண்டிய ஒரு வீடு உள்ளது. கட்டிட வடிவமைப்பாளர் அதை வடிவமைக்கிறார், ஒப்பந்தக்காரர் அதைக்கட்டுகிறார், வாடகை கொடுப்பவர் அதில் வாழுகிறார். பிதா கட்டிட வடிவமைப்பாளராகவும் இயேசு ஒப்பந்தக்காரராகவும் கட்டுபவராகவும், பரிசுத்த ஆவியானவர் வாடகைக்கு குடியிருப்பவராகவும் காணப்படுகின்றனர். மூன்று வேறுபட்ட நபர்கள் வேறு பட்ட வேலைப்பங்குகளோடு இருப்பதை காண்பிப்பதில் இந்த விளக்க உதாரணம் உறு தியாய் உள்ளது. ஒரு தேவனுக்குப் பதிலாக மூன்று தெய்வங்கள் ஒருங்கிணைந்து வேலை செய்வதாக எடுத்துக்கொள்ளப்படும்போது இந்த விளக்க உதாரணம் பலவீணமாயுள்ளது.

*ஆவி ஆத்துமா சரீர விளக்க உதாரணம் – 1% பிழையில்லாத சரித்தன்மை*

பிழையில்லாத சரித்தன்மையில் ஒரு சிறிய விழுக்காடு மட்டுமே இந்த விளக்க உதாரணத்தில் இருந்தாலும், ஒரு சிறிய யுத்தியையும் குறிப்பையும் இது உணர்த்துகிறது. ஒரு மனிதனுக்கு ஆவி, ஆத்துமா, சரீரம் இருப்பதுபோல; பிதாவாகிய தேவன் தெய்வத்துவமாகவும், ஆவியானவர் ஆதாரமாகவும், தேவ ஆத்துமாவாக பரிசுத்த ஆவியானவரும், மனித மாம்சத்தில் தேவனது வெளிப்படுத்தப்பட்ட சரீரமாக இயேசு, தேவனது காணக்கூடிய வெளிப்படுத்துதலாகவும் காணப்படுகின்றனர். இத மிகமிக பலவீனமான விளக்க உதாரணமாயிருந்தாலும், தேவனது ஒருமைத்துவத்தின் ஒரு தேவ நபராயிருப்பதை காண்பிக்கவாவது இது உதவுகிறது.

*புது காலபரிமாண விளக்க உதாரணம் – 30% பிழையில்லாத சரித்தன்மை*

இந்தப் புத்தகம் எழுதப்படுகிறபொழுது 2008ஆம் வருடமாயிருக்கிறது. 2018ல் எதிர்கால பீட்டர் டானுக்கு காலக் கருவி ஒன்று உள்ளதாக கற்பனை செய்துகொள்வோம். அவர் அந்த காலகருவியை 1998க்கு சென்றுள்ளார். அதற்குப் பிறகு 2008ல் என்னை சந்திக்க வந்துள்ளார். அந்தக காலக் கருவியிலிருந்து வெளியே வருகிறபோது, நாம் மூன்று பீட்டர் டான்களைப் பார்க்கிறோம்: ஒருவர் 1998லிருந்தும், ஒருவர் 2008லிருந்தும், ஒருவர் 2018லிருந் தும் வருகிறவர்கள். நாங்கள் மூன்று நபர்கள் எனினும், மூன்று வித்தியாசப்பட்ட காலப் பரிமாணத்திலிருந்து நாங்கள் ஒரே மற்றும் அதே நபராயிருக்கிறோம். வித்தியாசமான காலங்களினால் பிரிக்கப்பட்டிருந்தாலும், எங்களுக்கு வேறுபட்ட வேலைப்பங்குகளும், ஒவ்வொரு பத்தாண்டிலும் வெவ்வேறு வேலைகளைச் செய்தாலும், நாங்கள் அதே நபராகவும் மற்றும் ஒரே நேரத்தில் மூன்று நபர்களாகவும் உள்ளோம். சூரிய விளக்க உதாரணத்தைப் போலவே இந்த விளக்க உதாரணத்தையும் நான் விரும்புகிறேன். பழைய விளக்க உதாரணங்கள் காண்பிக்காத சில குறிப்பிட்ட பொதுக்கருத்துக்களை இது காண்கிறது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

திரித்துவத்தின வித்தியாசப்பட்ட விளக்க உதாரணங்களைப் பார்த்து கற்பனை செய்த பிறகு, தேவன் தேவனாக, எண்ணமுடியாத எண்ணிக்கையுள்ள நட்சத்திரங்களையும், பால்வழி மண்டலங்களையும், உலகங்களையும் சேர்ந்துள்ள முழு பிரபஞ்சத்தின் மேலும் தேவன் தேவனாயுள்ளதை, தேவனைப்பற்றிய நமது மனித கருத்து, நமக்கு விரிவடைந்து பெரிதாக வேண்டும். பொதுக்கருத்தின் எளிமைக்காகவே, எல்லா பொருட்களையும் அடக்கிய பிரபஞ்சத்தை அல்லது அண்டத்தை ஒரு பரிமாணமாகவும் (இந்தப் பௌதீக பொருள் மண்டலத்தில் வாழ்பவர்களுக்கல்ல – எப்படி பௌதீக உலகத்திலும் பல படிகளாக பௌதீக காணமுடியாத மின்காந்த அலைகள் இருப்பதுபோல, ஆவி ஜீவிகளுக்கு இங்கும் பல படிகளாக காணக்கூடிய தன்மை உள்ளது. இப்போது நாம் இந்த இடத்தில் கூறப்படும் விளக்கங்களை குழப்ப விரும்பவில்லை; தனக்குச் சொந்தமாக உள்ளேயுள்ள துணைப் பிரிவுகளின் பரிமாணங்களாக மூன்று மகா பெரிய பிரிவுகளைக் காணுங்கள்), தேவன் மட்டுமே வசிக்கிற, நாம் அழைக்கும் மூன்றாவது பரிமாணமாகிய தேவ பரிமாணம்.

இவ்வாறு தேவன் வாசம்பண்ணும் தேவபரிமாணம் நமக்கு இருக்கிறது, அதோடு சிருஷ்டிக்கப்பட்ட இரண்டு பரிமாணங்கள் உள்ளன: அவர் நம்மைச் சந்தித்து வந்தடைவதற் காக, நம்மை சிருஷ்டிப்பதற்காக, நம்மோடு உறவாடுவதற்காக, பிதாவாகிய தேவன் சக்தி–இடப்பரப்பு–நேரம் ஆகிய தொடர் நிகழ்வு அதே தனிமங்களை, ஆவியாகிய தேவனாகிய அவராலேயே உண்டாக்கிறார். தேவன் பிதாவாக (இன்னும் நல்ல வார்த்தை இல்லா திருப்பதால்) இப்பொழுது தேவன் வாசம்பண்ணும் தேவபரிமாணத்தில் வாசம்பண்ணு கிறவராக உங்களுக்கு இருக்கிறார். பரிசுத்த ஆவியாகிய தேவன் சக்தி–இடப்பரப்பு–நேரம் என்ற தொடர் நிகழ்வு அதே தனிமங்களில் தேவன் வாசம்பண்ணுகிறவராக உங்களுக்கு இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் சக்தி–இடப்பரப்பு–நேரம் ஆகிய தொடர் நிகழ்வு அதே தனிமங்கள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டவராக இருந்தாலும், அதோடு பிரபஞ்சத்தின் சக்தி–இடப்பரப்பு–நேரம் இவைகளை தாங்குகிறவராயிருந்தாலும், பிதாவாகிய தேவன் பரிசுத்த ஆவியாகிய தேவன், சக்தி–இடப்பரப்பு–நேரம் ஆகிய தொடர் நிகழ்வு அதே தனிபங்களுக்குள் வாழும் சிருஷ்டிப்புக்கு இன்னும் அவர் காணமுடியாதவராகவே இருப்பார் (இலைகள் வனத்தின் மிகச்சிறிய பகுதியாயிருப்பதால் எப்படி இலைகள் மரங்களையோ வனத்தையோ காணவே முடியாததாக இருக்கிறதோ அப்படியே).

தன் சிருஷ்டிகளுடன் உறவாட, தேவன் தான் சிருஷ்டித்த ஒவ்வொரு உலகங்களுக்கும், பால்வழி மண்டலங்களுக்கும், வார்த்தையாகிய தேவனாகத் தன்னை வெளிப்படுத்துகிறார். தனது சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் வார்த்தையாகிய தேவனாக ஒரே நேரத்தில் தன்னை வெளிப்படுத்தினாலும், பிரபஞ்சம் முழுவதிலும் உள்ள தனது ஒவ்வொரு சிருஷ்டிகளுக்கும், பிரத்தியேக விநோதமாகவே தன்னை வெளிப்படுத்துகிறார். நம்மோடு உறவாடுவதற்காக தெய்வீக மானவர், ஒரு தேவ–நபர் மூன்று பரிமாணங்களில் வசிக்கிறவராக உங்களுக்கு இப்பொழுது இருக்கிறார். தேவ–பரிமாணங்களில் பிதாவாகிய தேவன் வசிக்கிறார். தனது சிருஷ்டிப்பு களுக்கு காணக்கூடியதும் தொடக்கூடியதுமான தேவ வெளிப்பாடாக, வார்த்தையாகிய தேவன் வசிக்கிறார், பரிசுத்த ஆவியாகிய தேவன் தனது எல்லா சிருஷ்டிகளையும் சக்தி–இடப்பரப்பு–நேரம் ஆகிய தொடர் நிகழ்வு அதே தனிமங்களாக உள்ளடக்கி இருக்கிறார். ஒரே மற்றும் அதே தேவ–நபரான, பிதாவாகிய தேவன், வார்த்தையாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன், சர்வ வல்லவ ராகவும், சர்வ வியாபியாகவும், சர்வ ஞானமுள்ளவராகவும் இருக்கிறார்.

பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு, பால் வழிமண்டலத்தின் ஒரு சிறிய பகுதியில், தேவ சிருஷ்டிப்பில் ஒரு முரட்டாட்டம் பூமியை சம்பந்தப்படுத்தி நடைபெற்றது. ஆதாமுக்கு முந்திய கால பேராபத்து ஒன்று ஏற்பட்டது. அதின் பேரிடர் இன்னதென்று இனிமேல்தான் நாம் கண்டறிய வேண்டியுள்ளது. தனது மகா அன்பினாலே இந்த பால்வழிமண்டலத்தை தமது பக்கம் ஈர்த்துக்கொள்ள, வார்த்தையாகிய இந்த அற்புத விநோத தேவன், மனித மாம்ச சரீரத்தில் தன்னை வெளிப்படுத்த தெரிந்துகொண்டார். அவரைத்தான்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்று கண்டறிந்துள்ளோம். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு, தனது பிதாவோடு தனக்கு இருந்த மகிமைகளில் நாமும் ருசிபார்க்க, அவர் மூலமாக நமக்கு ஒருவழியைத் திறந்துள்ளார் (யோவா. 17:21–24). நாம் அவரை அறிந்துகொள்ளவும் (அதுவே நித்திய ஜீவன்) இயேசுவின் மூலமாக பிதாவின் மகிமையைக் காண நாம் பரிசுத்த ஆவியானவரால் பெலப்படுத்தப்படவும், இயேசு ஆசையுள்ளவராய் இருக்கிறார்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *அத்தியாயம் 3*

# கிறிஸ்துவத்தின் முக்கிய உபதேசங்கள்

கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் ஏதாவது ஒரு காலக்கட்டத்தில், நீதிகரிக்கப்படல், முற்றிலும் பரிசுத்தமாகுதல், முன்குறித்தல், முன் அறிவு என்ற சில 'பெரிய வார்த்தை' உபதேசங்களை எதிர்கொள்வார்கள். எளிய வார்த்தைகளில் சொல்ல வேண்டு மானால், நாம் கிறிஸ்துவுக்குள் யார் என்பதையும் (நீதிகரிக்கப்படல்), நம்மில் கிறிஸ்து யாராய் இருக்கிறார் (முற்றிலும் பரிசுத்தமாகுதல்) பூமியில் நம் வாழ்வின் மூலமாக தேவ திட்டம் எப்படி நம் வாழ்வில் செயல்படுத்தப்படுகிறது (முன் குறித்தல் மற்றும் முன் அறிவு) என்பவைகளை உள்ளடக்கும்.

### விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படுதல்

தேவனது சுயேட்சையான சிருஷ்டிகளைப்போல நாம் உயர்வாழ்ந்தாலும், நாம் ஒருபோதும் அவரைப் பிரிந்து உயிர் வாழ உண்டாக்கப்படவேயில்லை. விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படல் என்ற உபதேசம், இருண்ட காலத்தில் இழந்துபோயிருந்தது, மார்ட்டின் லூத்தர் போன்ற பிரசங்கிமார்களால் சீர்திருத்த காலத்தில், அதன் சரியான இடத்திற்கு திரும்ப நற்சீர் செய்யப்பட்டது. விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படுவதன் அஸ்திபாரமான சட்டரீதியான அடிப்படை என்பது மிகவும் எளிமையானது: நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்படுவதற்காக நமது பாவங்களின் தண்டனையை ஏற்றுக்கொள்ள, இயேசு சிலுவையிலே மரித்தார் (ரோம. 5:6–11). விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதின் சாரம்சம் என்னவெனில், தேவன் நம்மோடு வெறும் சட்டப்படியான உறவு மட்டும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால், நம்மோடு ஒரு அன்பின் உறவையே விரும்புகிறார். ஒரு திருமணத்திற்கு சட்ட அடிப்படையும் கட்டமைப்பும் இருந்தாலும், அன்பில்லாவிட்டால் அது ஒருபோதும் நிலைத் திருப்பதில்லை. ஒரு திருமணத்தில் அன்பை எடுத்துவிட்டால், அது ஒரு அடிமைத்தனம் ஆகிவிடும். விசுவாசத்தில் நீதிகரிக்கப்படுவதற்கு கிறிஸ்துவுக்குள் நமக்கு ஒரு சட்ட கட்டமைப்பு மற்றும் அடிப்படை இருக்கிறது. ஆனால், அதன் சாராம்சம் கிறிஸ்துவுக்குள் தேவனோடு உள்ள அன்பின் உறவேயாகும்.

இந்தக் காரணத்தினாலேயே, நாம் விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படும் (கிறிஸ்துவை இருதயத்திற்கு ஏற்றுக்கொள்ளுதல்) போது ஏற்படும் முதலாவது காரியங்களில் ஒன்று, நமது இருதயங்களில் தேவ அன்பு ஊற்றப்படுவதேயாகும் (ரோம. 5:5). விசுவாசத்தினால் நீதிகரிக் கப்படுகிற செயலில் பரிவர்த்தனை செய்யப்பட்ட ஒவ்வொன்றும், தேவனில் வெறும் சட்ட ரீதியான நிலைமட்டு*மல்ல,* அவரது ஜீவனும் சாரமும் நமக்கு பகர்ந்தளிக்கப்பட்டதுமாகும்:

1. நாம் தேவனோடு சமாதானத்தைப் பெறுகிறோம் (ரோம. 5:1).
2. நாம் நமது இருதயங்களில் அவரது அன்பைப் பெறுகிறோம் (ரோம. 5:5).
3. நாம் ஒரு அபிரிமிதமான கிருபையைப் பெறுகிறோம் (ரோம. 5:15–17).
4. நாம் நீதியாகிய ஈவை பெறுகிறோம் (ரோம. 5:17).
5. நாம் கிறிஸ்துவிலே நித்திய ஜீவனாகிய ஈவைப் பெறுகிறோம் (ரோம. 5:10, 21; 6:23).
6. நாம் கிறிஸ்துவின் வெற்றியிலே ஒற்றுமையை பெறுகிறோம் (ரோம. 6:4, 5).

கிறிஸ்துவோடுள்ள புதிய உறவை, அவரோடு புதிய திருமணத்தைப்போல பவுல் விளக்க உதாரணம் கொடுக்கிறார் (ரோம. 7:4). விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படுதலின் நிலை மற்றும் சட்ட ரீதியான அம்சத்தை மட்டுமே அநேக மக்கள் பார்த்து, தங்களது கிறிஸ்தவ வாழ்வதைக் கடினமாக அறிகின்றனர் – தங்களது சிந்தையில் அதை அறிந்திருக்கிறார்கள். ஆனால், தங்கள் வாழ்வில் வல்லமையின்றி இருக்கின்றனர். இது திருமணமுடிக்கப்பட்டும் அன்பில்லாமல் இருப்பதைப் போன்றதாகும்; என்ன செய்ய *வேண்டும்* என்பதை அவர்கள் அறிந்திருந் தாலும் ஆனால் அதைச் செய்ய அவர்களுக்கு *வல்லமை இல்லை.*

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

### *நீதியின் ஈவு*

விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படுவதற்காக, வெறும் சட்டரீதியான காரியங்களை மட்டும் இயேசு செய்து முடிக்கவில்லை; அங்குதான் அநேக கிறிஸ்தவர்கள் நின்றுவிடுகிறார்கள். தாங்கள் நீதிகரிக்கப்படுவதின் சட்டத்தை மட்டும் தங்கள் கையில் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். ஆனால், வல்லமையில்லாதிருக்கிறார்கள். சட்டத்திற்கு விரோதமாக ஒருவர் உங்கள் வீட்டை வைத்துக்கொண்டிருந்தால், சட்டபடி அவர்களை வெளியேற்ற முடியும். நீதிமன்றம் சட்டப்படி அதிகாரம் கொடுத்து, உங்களுக்கு வேண்டிய பத்திரத்தை கொடுக்க முடியும். ஆனால், அந்த நீதிமன்ற அதிகாரத்தை செயல்படுத்த, போலீஸ் மூலமாக சரீர செயல்பாட்டில் நீங்கள் ஈடுபட வேண்டும். இயேசு சட்டப்படி நிலைநிறுத்தியதோடு (*exousia* – அதிகாரம்) சத்துவ வல்லமையையும் (*dunamis* – வல்லமை) விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படுவதை அனுபவிக்க கொடுத்துள்ளார். ரோமர் புத்தகமும் மற்ற பவுலின் நிருபங்களும், இந்த முழு தொடர் நிகழ்ச்சிகளையும் வரைமுறைப்படுத்துகின்றன.

1. கிறிஸ்துவிலே நீதியாகிய ஈவை தேவன் நமக்குக் கொடுக்கிறார். அதை நாம் விசுவாசத்தின் மூலமாக பெற்றுக்கொள்கிறோம் (ரோம. 4:6–8, 13; 5:17).

2. நீதியாகிய ஈவை நாம் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தும் விசுவாசமும் ஒரு ஈவாகவே உள்ளது – அவருடைய வாழ்வின் ஈவு, விசுவாசத்தின் ஈவு (ரோம. 4:14, 16, 20). கிருபையினால் உண்டாயிருக்கும்படி, அது விசுவாசத்தினால் உண்டாயிருக்கிறது. இந்த விசுவாசம் இயேசு*வினுடைய* விசுவாசத்தினால் உண்டாயிருக்கிறது (ரோம. 3:26 *pisteos Iesou* இயேசு*வினுடைய* விசுவாசம்; 4:16). இயேசுவினுடைய விசுவாசம் என்பது, அவருடைய விசுவாசத்தின் ஈவாகும். நமது சொந்த விசுவாசமல்ல (அப். 3:16; எபே. 2:8; கலா. 2:20 தேவ குமார*னுடைய* விசுவாசத்தினாலே நான் வாழ்கிறோம்).

3. தேவனே நமக்குள் கிரியை செய்கிறார்: விரும்பவும் செய்யவும் (ரோம. 9:16; பிலி. 2:13). நாம் செய்யும்படிவிடப்பட்டிருக்கும் ஒரே பகுதி, நீதியின் கருவியாக நம்மை விட்டுக் கொடுப்பதேயாகும் அல்லது உங்கள் சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதாகும் (ரோம. 6:13, 18; 12:1–2).

நீதி மற்றும் விசுவாசத்தினால் நீதிகரிக்கப்படுவதன் சாரம்சம் என்னவெனில், நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். அவருடைய நீதியானது நம்மேல் ஈவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவசாயலில் நாம் ஒப்பாவதற்கு, நமது ஆவி ஆத்துமா சரீரத்தின் மூலமாக, அவருடைய ஜீவனின் வல்லமை பாய்ந்து செல்கிறது. இதுவே அவருடைய நீதியாகிய ஈவின் சுவிசேஷமாகும். இதை தேவன் விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு வெளிப்படுத்த விரும்பினார் (ரோம. 1:17).

### *முற்றிலும் பரிசுத்தமாகுதலும், கிறிஸ்தவ பரிபூரணமும்*

முற்றிலும் பரிசுத்தமாகுதல் மற்றும் கிறிஸ்தவ பரிபூரணம் என்ற உபதேசம், பெந்தெகொஸ்தே இயக்க நாட்களுக்கு முன்பு பரவலாக போதிக்கப்பட்டு விவாதிக்கப் பட்டது. அதற்கென்று தனியான சொந்த பெயரே இருந்தது. அது பரிசுத்தத்தின் இயக்கம் என்று அழைக்கப்பட்டது. ஜான் வெஸ்லி மற்றும் அவரது காலத்திலிருந்த அநேகர் கிறிஸ்தவ பரிபூரணம் மற்றும் முற்றிலும் பரிசுத்தமாகுதல் என்ற உபதேசத்தை நன்கு போதித்தனர். 1906 ஆம் ஆண்டின் பெந்தெகொஸ்தே இயக்கத்திற்கு முன்பு, இரட்சிப்பிற்குப்பிறகு 'இரண்டாம் ஆசீர்வாதம்' என்றுகூட இது விசுவாசிக்கப்பட்டது. அசூச தெரு எழுப்புதலுக்கு பிறகு, பெந்தெகொஸ்தே இயக்கம் முன்னிலைக்கு வந்த போது, தங்களது இறையியல் ஆதார அமைப்பில், புதிய பெந்தெகொஸ்தே அனுபவமாகிய ஆவியானவரின் ஞானஸ்நானத்தோடு அந்நிய பாஷையில் பேசுவதை எவ்வாறு அடையாளம்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கண்டுகொண்டு அதற்குரிய இடத்தில் வைப்பது என்பதில், ஆதிகால பெந்தெகொஸ்தே காரர்கள் தடுமாறினார்கள். அசூச தெரு எழுப்புதலின் தலைவராகிய செய்மூர் போன்றவர்களில் சிலர், பெந்தெகொஸ்தே அனுபவத்தை பரிசுத்தமாகுதலின் 'இரண்டாம்' ஆசீர்வாதத்திற்கு பிறகு 'மூன்றாம்' ஆசீர்வாதமாக அதைப் போதிக்க ஆரம்பித்தார்கள்.

துர்ஹாம் போன்ற மற்றவர்கள், மனந்திரும்பும் (முற்றுப்பெற்ற வேலையின் கோட்பாடு) பொழுதே, முற்றிலும் பரிசுத்தமாகுதல் நிறைவுபெற்றுவிட்டதாகவும், ஆவியானவரின் ஞானஸ் நானம் இரண்டாவது ஆசீர்வாதம் என்றும் போதிக்க ஆரம்பித்தனர். இவ்வாறு, பெந்தெகொஸ்தே எழுப்பதலின் ஆதி நாட்களில், இரண்டு முக்கிய எதிரான குழுக்களினுடைய அந்தப் புதிய இயக்கத்தைப் பற்றிய இறையியல் விளங்கிக் கொள்ளுதலினால் முரண்பாடு, நிறைந்திருந்தது. செய்மூரின் இறையியல் மேல் துர்ஹாமின் இறையியல் வெற்றிபெற்றதையும், நவீன பெந்தெகொஸ்தே சபைகளில் (இதைப்பொறுத்த வரையில் மற்ற திருச்சபைகளிலும் கூட) பரிசுத்தம் மற்றும் கிறிஸ்தவ பூரணத்தைப் பற்றிய உபதேசம் மிகவும் குறைவாகவே உள்ளதையும் நாமெல்லாரும் அறிவோம்.

இன்று, திருச்சபை வரலாற்றின் மூலமாக, அந்த இரண்டு இயக்கங்களின் முதிர்ச்சியை கண்ட பின்பும், கிறிஸ்தவ பரிபூரணம் என்ற கேள்விக்கு பதில் சொல்ல வல்லவர்களாக நாம் இன்னும் மாறவேண்டியுள்ளது. ஒரு கிறிஸ்தவன் பூமியிலிருக்கும்போதே பூரணமடைய முடியுமா? ஒரு கிறிஸ்தவன் பூமியிலிருக்கும்போதே பாவமில்லாதிருக்க முடியுமா? மற்றும் வருகின்ற வருடங்களில் சாத்தியமாக நாம் எங்கு இருப்போம் என்பதற்கும், கிறிஸ்துவின் பாவப்பரிகார வேலையில் நமது அடிப்படை விசுவாச முறைகளில் அவைகள் பாதிப்பு உண்டாக்குவதாலும், இந்த கேள்விகளுக்கு பதில்கள் முக்கியமாகின்றன.

*ஒரு கிறிஸ்தவன் பூமியில் பாவமற்றவராகவும் பூரணராகவும் இருக்க முடியுமா?*

நமது பாவங்களுக்காக இயேசு சிலுவையில் மரித்தார் என்றும், நாம் பாவத்திலிருந்து விடுபட்ட வாழ்வை வாழ பவுல் எதிர்பார்ப்பதையும் நாம் யாவரும் அறிவோம் (ரோம. 5:8; 6:1–2). 1 யோவான் 1:8ற்கும் 1 யோவன் 3:9க்கும் இடையே உள்ள எதிரான தன்மை யாதெனில், பாவத்திலிருந்து விடுபட தேவன் கொடுக்கும் ஆற்றலை விளங்கிக்கொள்ள முதிர்ச்சியடைந்திருக்கும் ஆவிக்குரிய வாலிபர்கள் மற்றும் ஆவிக்குரிய தகப்பன்மார்களுக்கும், கர்த்தருக்குள் ஆவிக்குரிய குழந்தைகளாயிருப்பவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் மட்டுமே (1 யோவா. 2:1; 2:12–14). தேவனாலே பிறக்கிறவர்கள் பாவஞ்செய்கிறதில்லை என்பது தெளிவாகிறது (1 யோவா. 3:9). நமது பாவங்கள் நமது பாவ சுபாவம் ஆகிய இரண்டிற்காகவும் கிறிஸ்து சிலுவையிலே மரித்தார் என்றால், அவரிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்ட பாவ நிவாரணத்தின் நல்ல தாக்கமானது, நம்மை பாவத்திலிருந்து விடுவிப்பதோடு மட்டுமல்லாமல், பாவ சுபாவ ஆளுகையிலிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டு விடுதலையோடு வாழவும் செய்கிறது. நாம் பாவத்திலிருந்து விடுதலையடைந்து வாழ தேவன் விரும்புகிறாரா என்ற கேள்விக்கு சரியான ஒரேபதில் சந்தேகத்திற்கே இடமில்லாமல் 'ஆம்' என்பதாகும். இவ்வாறு பாவத்திலிருந்து நாம் விடுதலையடைய *வேண்டுமா* என்பது *கேள்வியல்ல,* ஆனால் பாவத்திலிருந்து *எப்படி* நாம் விடுதலையடைந்த வாழ்க்கை வாழவேண்டும் என்பதுதான் கேள்வி. *இயேசு* கறைதிரையில்லாத ஒரு திருச்சபைக்காகவே வருவார் என்றால், திருச்சபையானது முதிர்ச்சியடைந்த பரிபூரண திருச்சபையாக இருக்க வேண்டும் என்பது தெளிவாயிருக்க வேண்டும் (எபே. 4:13–16; 5:27). எனவே, பாவத்திலிருந்து ஒரு கிறிஸ்தவர் விடுதலையடைந்து வாழ முடியுமா என்ற கேள்விக்கு வேதாகம பதில் 'ஆம்' என்றிருப்பதால், எழுப்பப்படும் அடுத்த கேள்வியானது 'எப்படி' என்பதே.

*ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு பாவமற்று தேவனில் பரிபூரணமாயிருக்க முடியும்*

நமது பௌதீக சரீரத்திலிருந்து பாவ சுபாவம் (அல்லது பாவம் செய்ய சாயுந்தன்மை அல்லது ஆசை) முழுவதுமாக நீக்கப்படவில்லை என்பதை முதல் முக்கியமாக விளங்கிக் கொள்ள வேண்டும். தனது மாம்சத்தில் பாவம் வாசமாயிருப்பதாக பவுல் ஒத்துக்கொள் கிறார் (ரோம. 7:18–25). தேவனுக்கு முன்பாக நாம் பாவமற்ற பரிபூரணமாக இருக்க,

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கிறிஸ்துவுக்குள் இருக்கும் இடத்தின் நிலை அல்லது சுயகருத்து—செல்வாக்கற்ற பரிபூரணத்தைப் பற்றி நாம் பேசவில்லை என்றும், ஆனால் ஒவ்வொரு விசுவாசிக்கும் கிடைக்கக்கூடிய, உண்மையான, அனுபவசம்பந்தமான, சுயக்கருத்து—செல்வாக்குள்ள பரி பூரணத்தைப் பற்றியே பேசுகிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும்): நமக்கு சக்தியளிக்க, தேவ செயலாக பவுல் விளங்கிக் கொண்ட மூன்று காரியங்களில் அதற்குரிய தீர்வு காணப்படுகிறது.

1. முற்றிலும் பரிசுத்தமாகுதல் கடந்தகாலமாக இருக்கிறது
   நமது ஆவியிலே கிறிஸ்துவின் ஜீவனை நாம் ஏற்றுக்கொண்டு, புதிய பிறப்பை அனுபவிக்கும்போது, மறுபடியும் பிறந்த அனுபவத்தின் மூலமாக நமது சுபாவத்திலிருந்து பாவம் முற்றிலும் நீக்கப்பட்டிருக்கிறது (ரோம. 8:10, 15–16; 2 கொரி. 5:17).

2. முற்றிலும் பரிசுத்தமாகுதல் நிகழ்தொடர்காலமாக இருக்கிறது
   நமது சிந்தை அல்லது மனது புதுப்பிக்கப்படும் தொடர் நிகழ்வின் மூலமாக, நமது ஆத்தும சுபாவத்திலிருந்து பாவம் முற்றிலும் நீக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது (ரோம. 8:4–9). இது மறுரூபமடையும் ஒரு தொடர் நிகழ்வாக காணப்படுகிறது (ரோம. 12:1–2; 1 யோவா. 2:12–14). இதை 'இரண்டாவது' அல்லது 'மூன்றாவது' உடனடி ஆசீர்வாத தொடர் நிகழ்வாக காண்பதற்கு பதிலாக, வளர்ச்சி தொடர் நிகழ்வாக காண்பது இறையியலின் படி மிகவும் ஆரோக்கியமானதாக இருக்கும்.

3. முற்றிலும் பரிசுத்தமாகுதல் எதிர்காலமாக இருக்கிறது
   நமது பௌதீக சரீரங்களில் உள்ள பாவ சுபாவம், பரிசுத்த ஆவியானவரின் *zoe* ஜீவனால் 'செயலற்றதாக்கப்படுகிறது' (ரோம. 8:11–13; கலா. 5:16, 24–25).

ஒரு ஒத்தவாக்கிய அகராதியை எடுத்து, புதிய ஏற்பாட்டில் முற்றிலும் பரிசுத்தமாக்கப் படுதல் அல்லது முற்றிலும் பரிசுத்தமாகுதல் என்ற தலைப்பின் கீழ் உள்ள எல்லா வார்த்தை களையும் பார்த்தால், சில நேரங்களில் கடந்தகாலத்திலும், சில நேரங்களில் நிகழ்காலத் திலும், மற்ற நேரங்களில் எதிர்காலத்திலும் பயன்படுத்தப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள காலங்கள் முறையே நமது ஆவிகள், ஆத்துமாக்கள் மற்றும் நமது சரீரங்களில் நடைபெற்றுள்ள தேவ கிரியையோடு வரிசையாக நிற்கின்றன. தன்மையில் மூன்று பகுதிகளாக உள்ள (ஆவி, ஆத்துமா சரீரம் – 1 தெச. 5:23), நாம் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம் (ஆவி), நாம் முற்றும் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (ஆத்துமா), நாம் முற்றிலும் பரிசுத்தமாக்கப்படுவோம் (சரீரம்), என்று இறையியலின்படி சொல்ல முடியும். இதை இன்னொரு வகையாக சொல்ல வேண்டுமானால், பாவத்தின் தண்டனையிலிருந்து நாம் விடுவிக்கப் பட்டிருக்கிறோம் (கிறிஸ்துவின் பாவநிவாரணபலியின் மூலமாக ஆவிக்குரிய பிறப்பு), பாவத்தின் வல்லமையிலிருந்து நாம் விடுவிக்கப்பட்ட வாழ்க்கை வாழ முடியும் (சிந்தை / ஆத்துமா புதுப்பிக்கப்படுவதின் மூலமாக), ஒரு நாளில் பாவப் பிரசன்னத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம் (உயிர்த்தெழுதலில் புதிய சரீரம்கொடுக்கப் படும்). புதிய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை கருத்தாய் படிப்பது இந்த கடந்தகால, நிகழ்கால, எதிர்கால உண்மைகளை விளங்கிக்கொள்வதை ஒப்பமிட்டு உறுதி கூறும்.

தேவனுக்கு முன்பாக நாம் பாவமில்லாமலும் பரிபூரணமாகவும் இருக்க முடியும் என்ற தொடர் நிகழ்வை அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கெழுதின நிருபத்தில் விளங்கிக் கொண்டபடியே நாம் அடையாளங்கண்டு கொள்வது, நமது பௌதீக சரீரத்தில் பாவத்தின் பிரசன்னம் இன்னும் இருப்பதால், கிறிஸ்துவில் விடாமல் நிலைத்திருப்பதும் பரிசுத்த ஆவியானவரால் நிரம்பியிருக்கிறதுமே, பாவமற்ற தன்மையையும் கிறிஸ்தவ பரிபூரணத்தையும் பராமரித்துக்கொள்ள உதவும். பரிசுத்த ஆவியானவரால் 'தொடர்ந்து' நாம் நிரம்பாமல் இருக்கும் நொடியில்தானே, நமது மாம்சத்திலிருக்கும் பாவ சுபாவத்தை 'செயலிழக்கச் செய்யும்' பரிசுத்த ஆவியானவரின் வேலை நம்மைவிட்டு கடந்து சென்றுவிடுகிறது. பரிபூரணமாக, பாவமற்று, முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு 'இருக்க வேண்டிய' கிறிஸ்தவன் மறுபடியும் பாவத்தில் விழ முடியும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இவ்வாறு, பரிபூரண கிறிஸ்தவ வாழ்வின் உண்மையான இரகசியமும் திறவுகோலும், நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் பரிசுத்த ஆவியானவரின் உள் நிரப்பப்படுதலில் தொடர்ந்து சார்ந்துகொள்வதேயாகும். இந்த உள்நிரப்பப்படுதலும் கிறிஸ்துவின் பகிர்ந்தளிப்பும், புதிய ஏற்பாட்டில் பல்வேறு வழிகளில் உரைக்கப்பட்டுள்ளன. இனி அவரல்ல, கிறிஸ்துவே அவருக்குள் வாழ்வதை பவுல் அடையாளங்கண்டுகொண்டார் (கலா. 2:20). கடினமாய் உழைத்தது (நாளுக்கு நாள் வாழ்தல்) அவரல்ல, ஆனால் அவர் அவ்விதமானவராக இருக்க தேவ கிருபையே அப்படிச் செய்தது என்றும் அவர் கண்டுகொண்டார் (1 கொரி. 15:10). அவரில் நாம் கனி கொடுக்கவேண்டுமானால், திராட்சைச் செடியில் நாம் நிலைத்திருக்க வேண்டும் என்று இயேசு சொன்னார் (யோவா. 15:5).

நாம் மாம்சத்தின் கிரியைகளை நிறைவேற்றாதிருக்க வேண்டுமானால், ஆவியானவரால் தொடர்ந்து நிரம்பி இருந்து, ஆவியானவரில் நடக்க வேண்டும் என்றும் பவுல் உரைத்தார் (எபே. 5:18–19; கலா. 5:16). நமது பெலத்தினாலே நாம் பாவமற்ற பரிபூரணராயிருக்க 'முடியுமா' என்ற கேள்வி கேள்வியல்ல, மாறாக, 'ஆவியானவரால் நிரம்பியிருக்கவும்' அல்லது 'நமது வாழ்வில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள கிருபையை அனுமதிக்கவும்' அல்லது 'கிறிஸ்து நம் மூலமாக வாழ அவரை அனுமதிக்கவும்' கற்றுக்கொண்டிருக்கிறோமா என்பது தான் கேள்வியாகும். நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் இதைத் தொடர்ந்து செய்ய நாம் கற்றுக்கொள்வோமானால், அப்பொழுது மெய்யாகவே நாம் கிறிஸ்துவுக்குள் அனுபவப்பூர்வ மாக பாவமற்ற பரிபூரணராயிருப்போம்.

### *கிறிஸ்தவ பரிபூரணத்தின் தரம்*

'நாம் எதைச் செய்யாதிருக்கிறோம்' என்பதாகத்தான் பலநேரங்களில் ஜனங்கள் கிறிஸ்தவ பரிபூரணத்தைக் காண்கிறார்கள்; உதாரணமாக, 'பாவஞ்செய்யாதே, உலகப் பிரகாரமாக இருக்காதே போன்றவைகள்'. சத்தியம் என்னவெனில், கிறிஸ்தவ பரிபூரணம் என்பது, நமது ஆவிகள், ஆத்துமாக்கள், சரீரத்தில் தேவனின் சுபாவம் அதிகரிக்க பரிபூரண மடைவதைப்பற்றியதாகும். இது நமது இருதயம் பரிபூரணமடைவதில் ஆரம்பமாகிறது. நமது பரமபிதா பரிபூரணராயிருப்பதுபோல, நாமும் பரிபூரணராயிருக்க அறிவுறுத்தப்படுகிறோம் (மத். 5:48). லூக்காவில் இந்த வசனத்தை, பரமபிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள் என்று இயேசு சொன்னார் (லூக். 6:36). வேறுவிதமாக சொல்லப்போனால், நமது பரமப் பிதா அன்பும் மனதுருக்கமுள்ள இருதயம் உள்ளவராயிருக்கிறதுபோல, நாமும் இருக்க வேண்டுமென்பதே. தேவன் அன்பாயிருக்கிற தினால், நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுகிற பரிபூரணமானது, நாம் அன்பின் பரிபூரண இருதயமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதே. இவ்வாறு, கிறிஸ்தவ பரிபூரணத்தின் சாராம்சம் என்னவெனில், நமக்குள்ளே இருக்கிற தேவ அன்பின் பரிபூரணம்தான் என்று சொல்ல வேண்டும். இது காரணகாரியங்களுக்கு சரியாகப் பொருந்தும். ஏனெனில், நாம் மெய்யாகவே தேவ அன்பினால் நடக்கும்பொழுது, நாம் தேவனது எல்லாக் கட்டளை களையும் நிறைவேற்றுகிறோம் – தேவனது கட்டளைகளில் நாம் நடப்பதென்பது, நாம் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டு பாவமற்றவர்கள் என்பதையே குறிக்கும். இவ்வாறு அன்பின் கிரியைகளோடு கூடிய அன்புகூரும் ஆவி, அன்புகூரும் ஆத்துமா, கிறிஸ்தவ பரிபூரணத்தின் நிறைவிலிருப்பதை வெளிப்படையாகக் காட்டுகிறது.

தவறான கிரியைகள் இல்லாமலிருப்பது மட்டுமே கிறிஸ்தவ பரிபூரணம் என்று ஒரு நபர் நினைத்தால், கிறிஸ்தவ பரிபூரணம் என்ற அவர்களது விளங்கிக்கொள்ளுதலின் தரம் ஆழமற்றதே. ஒரு நபர் வெளிப்படையாக எந்தத் தவறும் செய்யாதவரைப்போல காணப்படக் கூடும். எனினும், அன்புகூராதவராக இருக்க முடியும். எல்லா கிறிஸ்தவ காரியங்களையும் செய்வதுபோல வெளிப்பிரகாரமாகக் காணப்படும் மக்களுடைய மனதும் ஆத்துமாவும் தவறான, உலக, பாவம் நிறைந்த, சுயநல காரியங்களால் நிறைந்திருக்கும். இது ஒரு உண்மையான கிறிஸ்தவ பரிபூரணமல்ல; இது வெள்ளையடிக்கப்பட்ட சுவர் என்று பவுல் அழைத்த வெளிப்பிரகாரமாக இருக்கும் வெளியேயுள்ள ஒரு கடினமான தோலைப் போன்றதாகும் (அப். 23:3).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஒருவர் அன்பில் நடக்காவிட்டால், இருளிலும் மரணத்திலும் நடக்கிறவராயிருக்கிறார் என்று சொல்லுமளவிற்கு யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார் (1 யோவா. 2: 9–11; 3:14). நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட, உயர்வான வேதாகம கிறிஸ்தவ பரிபூரணத்தின் தரத்தை அடைய, நமது ஆவி ஆத்துமா சரீரத்தில், தேவ அன்பினால் நிறைந்து முழுவதும் அதில் பூரிதமடைந்தவர்களாயிருக்க வேண்டும் (1 யோவா. 4:18). அன்பினால் நாம் நிறைந்திருக்கும்பொழுது, நாம் கிறிஸ்துவினால் நிறைந்திருக்கிறோம் (எபே. 3:17–19). மறுபடியும் பிறந்ததை, பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பிறப்பு என்றுமட்டும் அதை நோக்காமல், அன்பிற்குள் பிறந்திருக்கிறதாக நாம் அதை நோக்க வேண்டும். தேவனுடைய ஜீவன் நமது இருதயங்களுக்குள் ஊற்றப்பட்டிருப்பதிலிருந்து பாய்ந்து வரும் நமது வாழ்வின் முதற்படிகளை நாம் எடுக்க பெலமுமள்ளவர்களா இருக்கிறோம் (ரோம. 5:1–5).

நாம் தேவ அன்பில் முதிர்ச்சி அடைந்து வளரும்வரையில், கிறிஸ்துவ வாழ்வின் முழுமை என்பது, இந்த அன்பின் ஆற்றின் நிறைவில் வளருவதாகும். மெய்யாகவே அன்பின் முதிர்ச்சி அடையாதிருப்பது என்பது, தேவ காரியங்களில் மழலையர் பள்ளியில் இருப்பது போன்றதாகும் – நாம் எவ்வளவு தந்திரசாளிகள் என்று நாம் நினைத்தாலும் சரி, அல்லது நமது அறிவுத் திறமை எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சரி, அல்லது எவ்வளவு தாலந்து உள்ளவர்களாக இருந்தாலும் சரி, அல்லது மற்றவர்களுக்கு உதவி செய்வதில் எவ்வளவு தர்மகர்த்தாவாய் இருந்தாலும் சரி (1 கொரி. 13:2) தேவனது நிபந்தனையற்ற அன்பில் முதிர்ச்சியற்றவராய் காணப்படும் ஒரு நபரோ, கிறிஸ்தவரோ அல்லது கிறிஸ்தவ ஊழியரோ ஆனாலும், அவர்கள் மனித மற்றும் சமுதாயத்தின் பார்வையில் எவ்வளவு உயர்வானவர் களாகவும் பெரியவர்களாகவும் இருந்தாலும், அவர்கள் தேவ பார்வையில் அவரது அன்பின் மகா ராஜ்யத்தில் வெறும் குழந்தைகளாகவும் மிகவும் முதிர்ச்சியடையாத பிள்ளைகளாகவும் காணப்படுகிறார்கள் (1 கொரி. 13:11 – குழந்தைத் தன்மை) உண்மையான கிறிஸ்தவ முதிர்ச்சியும், கிறிஸ்தவ பரிபூரணமும் தேவ அன்பின் ஆழம், உயரம், அகலம், நீளத்தால் அளக்கப்படுகிறது. மிகவும் பெரியதானது அன்பே.

### *முன் தீர்மானமும் முன் அறிவும்*

தேவன் முன் அறிந்தார், அதன்பிறகே முன் தீர்மானிக்கிறார் என்று வேதம் நமக்குச் சொல்கிறது (ரோம. 8:29). தேவன் சர்வத்தையும் அறிந்தவர் என்பதை, எந்த ஒரு சரியான தேவனைப் பற்றிய போதனையும் ஒத்துக்கொள்ள வேண்டும் – தேவன், கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் வருங்காலம் ஆகியவற்றின் எல்லாக் காரியங்களையும் அறிந்திருக்கிறார். அவருடைய முன் அறிவின் எல்லா சாத்தியக்கூறுகளிலிருந்தும், தேவன் பிறகு முன் தீர்மானிக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், முன் தீர்மானத்திற்கு முன்பு, முதலாவது முன் அறிவு வருகிறது (ரோம. 8:29–30). இந்த வரிசைக் கிரமம் மிக மிக முக்கியமானது. தனது சிருஷ்டிப்பின் ஒவ்வொரு சாத்தியக்கூறு மற்றும் ஒன்றிற்கு உள்ள மற்ற சுய சித்த தீர்மானத்தின் அடிப்படையில், தேவன் ஒரு திட்டத்தை அமைக்கிறார். அது நம்மை திரும்ப அவரிடமே நடத்திச் செல்லும். ஒரு திட்டத்தை அவர் அமைக்காமல், அவரது திட்டத்தில் பிறகு நாம் பொருந்தும்படி நம்மை சிருஷ்டிக்கிறார்.

பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவ வேத ஆராய்ச்சியாளர்கள், முன்தீர்மானம் மற்றும் சுய சித்தம் ஆகிய பொது கருத்துக்களோடு போராடிவந்துள்ளார்கள். கால்வினிசத்தின் உபதேசம் (ஜான் கால்வின் மற்றும் அவரைப் பின்பற்றினவர்களால் உருவாக்கப்பட்டு விருத்தியடைந்தது) சிலர் மட்டுமே பரலோகத்திற்குச் செல்ல முன்தீர்மானிக்கப்பட்டுள்ளனர் மற்றும் அவர்கள் தங்களது இரட்சிப்பை இழக்கமாட்டார்கள் என்று கூறுகிறது. அர்மெனிசத்தின் உபதேசம் (ஜெகோபஸ் அர்மேனியஸ் மற்றும் அவரைப் பின்பற்றினவர்களால் உருவாக்கப்பட்டு விருத் தியடைந்தது) யார் வேண்டுமானாலும் இரட்சிப்பை இழந்து விடமுடியும் மற்றும் அதைப் பாதுகாத்துக்கொள்ள அவர்கள் கிரியை செய்ய வேண்டும். இவ்வாறு கால்வினிசத்திற்கும் அர்மெனிசத் திற்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம், வேதாகம பள்ளிகளிலும் ஒவ்வொரு இடத்திலுமுள்ள பிரசங்க பீடங்களிலுமிருந்து தீவிரமாய் வெளிப்பட்டது. ஜான் வெஸ்லி கால்வினிசத்தை நோக்கி சாய்ந்துவிட்டார், ஜார்ஜ் வைட்பீல்ட் அர்மெனிசத்தை நோக்கி

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

சாய்ந்துவிட்டார். ஆனால், தேவ ஊழியத்தில் நல்ல நண்பர்களாகவே நிலைத்திருந்தனர். வேதம் என்ன சொல்லுகிறது?

நாம் சிருஷ்டிக்கப்பட்டதற்கு முன்பே, நாம் எல்லாரும் முன்தீர்மானிக்கப்பட்டோம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை (எபே 1:4). சிலர் தங்கள் இரட்சிப்பை இழந்துவிடு வதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதிலும் எந்த சந்தேகமுமில்லை (எபி. 6:1–6). முன் தீர்மானிக்கப்படுதலைப் பற்றிய எல்லா வேதவாக்கியங்களையும், இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு *எல்லா* மனிதர்களும் உலகமுழுவதிலும் மனந்திரும்ப வேண்டும் என்பதைப் பரிந்துரைக்கும் வேதவாக்கியங்களோடு ஒன்று சேர்த்து வைக்கும்போது, *எல்லா* மனிதர்களும் அவருடைய சாயலுக்கு ஒப்பாக இருக்கும்படி *எல்லா* மனிதர்களையும் தேவன் முன்தீர்மானித்திருக்கிறார் என்று நாம் சொல்ல முடியும்; இவ்வாறு, *எல்லாருக்கும்* பாவமிருப் பதால், *எல்லாரும்* மனந்திரும்புவதோடு இரட்சிப்புக்காக இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதும் அவசியமாகிறது (ரோம. 8:29:30; எபே. 1:5, 11; 1 தீமோ. 2:4). இவ்வாறு, ஒரு சிலர் இரட்சிக்கப்படவும் மற்றவர்கள் அழிந்துபோகவும் தேவன் தெரிந்துகொண்டுள்ளார் என்று சொல்வதினால், கால்வினிசம் தவறானதாகிறது. அழிக்கப்படும்படி தேவன் தெரிந்து கொண்டவர்களில் அவரும் ஒருவர் என்று நினைத்த ஜான்பனியன், இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்குள்ள போராட்டத்தை தனது சுயசரிதையில் பகிர்ந்து கொண்டுள்ளர். ஒருசிலர் இரட்சிக்கப்படவும் ஒரு சிலர் அழிக்கப்படவும் தெரிந்துக் கொள்ளப்பட்டது தேவ சித்தம் என்று ஜனங்கள் விசுவாசிக்கும்பொழுது, தேவன் அவர்களை அழிவுக்காகவே தெரிந்துகொண்டார் என்று பிசாசு பக்கத்தில் வந்து, ஜனங்களுக்கு எப்பொழுதும் சொல்வான். தன்னிடத்தில் வருகிறவர்களை தேவன் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை என்ற வசனத்தில் ஆறுதலை கண்டடைந்ததாக முடிவில் ஜான்பனியன் கண்டு பிடித்தார் (யோவா. 6:37).

கால்வினிசம் முன்தீர்மானிக்கப்படுதலின் வியாக்கியானத்தில் ஒருபுறச்சாய்வுக்குச் செல்லும்போது, அர்மெனிசம் ஒருவர் எவ்வளவு எளிதாக தன் இரட்சிப்பை இழந்து விட முடியும் என்பதில் ஒரு புறச்சாய்வுக்குச் செல்லுகிறது. ஒரு நபர் மனந்திரும்பி தனது இரட்சிப்பை இழந்து, மனந்திரும்பி பின் மாற்றமடைந்து, மறுபடியும் இரட்சிப்பை இழந்து, இண்டாவது முறை மனந்திரும்புவதாகவும், விசுவாசிப்பதை நம்புபவர்களும் இருக்கிறார்கள். மறுபடியும் பிறப்பதை, சுயசித்தத்தின் மனித அப்பியாசம் மட்டுமே என்று, அற்பமான போதனைகள் சொல்கின்றன நாம் விழாமல் நம்மை தடுத்து நிறுத்தும் தேவ வித்து நமது ஆவியில் பதிக்கப்பட்டுள்ளது என்ற இயற்கைக்கப்பாற்பட்ட காரணியை அவைகள் அலட்சியப்படுத்துகின்றன (1 யோவா. 3:9; யூதா 24) அப்படியென்றால் இந்த இரண்டு ஒரு புறச்சாய்வு வியாக்கியானங்களுக்கு மத்தியில், சரியான நடுநிலைதான் என்ன மற்றும் ரோமர் 9:17, 22 வசனங்களில் உள்ள பார்வோனுடைய முன்தீர்மானிக்கப்பட்ட ஆக்கினைத்தீர்ப்பை எவ்வாறு ஒருவர் விவரிக்க இயலும்?

### *இரண்டு பகுதிகள் மற்றும் இரண்டு மட்ட நிலைகளின் முன்தீர்மானம்*

இந்த எல்லா வேதவாக்கியங்களையும் ஒருங்கிணைக்கும் திறவுகோல் என்பது, இரண்டு பகுதி முன்தீர்மானங்களும் மற்றும் இரண்டுமட்டநிலை முன்தீர்மானங்களும் இருப்பதை விளங்கிக்கொள்வதில்தான் உள்ளது. இரண்டு பகுதி முன்தீர்மானங்கள் என்பது நிகழ்ச்சி யின் முன்தீர்மானம் மற்றும் அதற்கு எதிராக உள்ள நபர்களின் முன்தீர்மானம் ஆகும். தேவனால் முன்தீர்மானிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட நிகழ்சிகள் உள்ளன. அவைகள் நடைபெறப்போகிறதை மனுக்குலத்தின் சுய தெரிந்தெடுப்பு பாதிக்கவே முடியாது. மனுக் குலத்தின் சுய தெரிந்தெடுப்பு சில நேரங்களில் நடைபெறப்போகிறவைகளை தாமதப்படுத்த மட்டும்தான் இயலும். ஒரு நல்ல உதாரணம் என்னவெனில், இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பூமிக்கு சென்றடைவதற்கு செய்யப் பட்ட முன்தீர்மானம் ஆகும். எகிப்திலிருந்து வெளியே வந்த முதல் தலைமுறையின் கீழ்ப் படியாமை, அந்ததேசத்தை அவர்கள் சுதந்தரிப்பதைத் தடுத்தது. ஆனால், நாற்பது ஆண்டு களுக்குப் பிறகு, இரண்டாவது தலைமுறையினரால் அந்த நிகழ்ச்சி நடைபெறு முடிந்தது. நிகழ்ச்சிகளின் முன்தீர்மானம் என்பது, தேவனைப் பற்றிய நமக்குள்ள தேவ வெளிப்பாட்டின்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஒருபகுதியாகவே அமைகிறது. இது நடைபெற வேண்டிய முன்தீர்மானிக்கப்பட்ட பாதையில் நிறுத்தப்பட முடியாதது, அவைகள் கொஞ்சம் தாமதிக்கத்தான் முடியும். ஒரு நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்த மனிதர்கள் உபகரணங்களாக அத்தியாவசியமாகின்றனர் என்ற கூற்றினால் அவைகள் தாமதிக்கப்பட முடியும். ஆனால், மனிதர்கள் தங்களது சுய தெரிந்தெடுப்பினால் அந்த திட்டத்திற்கு தங்களை விட்டுக்கொடுக்காமல் போகும்போது, பிறகு அந்த பூர்வ திட்டதை நிறைவேற்ற மற்றுமொரு மனிதர் பயன்படுத்தப்படுகிறார்.

முன்தீர்மானத்தின் இரண்டாவது பகுதியானது ஜனங்களின் முன்தீர்மானம், அதற்கு இரண்டு மட்ட நிலைகள் உள்ளன: முதல் மட்ட நிலையானது ஒரு நபரில் நடைபெறும் பொதுவான தேவ வேலைகள். இரண்டாவது மட்ட நிலையானது, ஒரு நபரில் நடைபெறும் குறிப்பான தேவ வேலைகள். இதன் காரணமென்னவென்றால், தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் சுய சித்தமாகும். இந்த சுய சித்தத்தினால், சரியான சுய தெரிந்தெடுப்புகளை உற்சாகப்படுத்தவும், தவறான சுய தெரிந்தெடுப்புகளை தடைசெய்யவும், பலனளிக்கும் மற்றும் தண்டனை கொடுக்கும் நடைமுறையை நீதி எதிர்பார்க்கிறது. தேவன் நியமித்த சுய தொடர்ந்து வரும் விதிகள் மூலமாக தேவனது ஒவ்வொரு சிருஷ்டியிலும் பலனளிக்கும் மற்றும் தண்டனை கொடுக்கும் பகுதியாக உள்ளே கட்டப்பட்டுள்ளது. நன்மைக்கேதுவான அதே விதிகள் அவைகளுக்கு முரண்பாடாக செயல்படுகிறவர்களுக்கு விரோதமாக வேலை செய்யும்; அதே விதிகள் அவர்களை ஆசீர்வதித்திருக்க முடியும். உதாரணமாக, இயற்கையின் விதியாகிய நெருப்பு, மின்சாரம், புவியீர்ப்பு முதலியவைகள் ஆகும். பௌதீக மண்டலத்தைத் தவிர மற்ற பகுதிகளை ஆளுகை செய்யும் விதிகளும் உண்மை யாகவே இருக்கத்தான் செய்கின்றன: அவைகள் சமூக விதிகள், ஆத்தும விதிகள், ஆவிக்குரிய விதிகள் முதலியன.

ஒவ்வொருவரும் முன்தீர்மானத்தின் மட்ட நிலை ஒன்றில்தான் ஆரம்பிக்கிறார்கள். ஒருவர் வாழ்வின் சரியான தீர்மானங்களை தொடர்ந்து எடுக்கும்போது, முன்தீர்மானத்தின் இரண்டாவது மட்ட நிலையின் நேரம் வரும்போது, அவரது வாழ்வில் அதிக விசேஷித்த கிரியைகள் பயன்படுத்தப்பட கொண்டுவரப்படுகின்றன. உதாரணமாக, ஆபிரகாம் தொடர்ந்து தேவனுக்குக் கீழ்படிந்ததினால், ஒவ்வொரு முறையும் அவர் சரியான தீர்மானத்தை எடுத்த ஒவ்வொரு நேரத்திலும், தேவன் தனது விசேஷித்த வேலையையும் ஆசீர்வாதத்தையும் அவரது வாழ்வில் அறிவிக்க ஆரம்பித்தார்.

1. லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்த <u>பிறகு,</u> அவரையும் அவரது சந்ததிகளையும் அவர் ஆசீர்வதிப்பதற்காக, தேசத்தில் நடந்து திரியும்படி தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னார் (ஆதி. 13:14–17).
2. சோதோமின் ராஜா கொடுத்த வாய்ப்புக்கு ‘வேண்டாம்’ என்று சொன்ன <u>பிறகு</u> தேவன் ஆபிரகாமுக்கு ஒரு சுதந்தரவாளியை வாக்குப்பண்ணி, அவரோடு விசேஷித்த உடன்படிக்கையை உண்டாக்கினார் (ஆதி. 15:1–21 *இந்தக் காரியங்களுக்குப் பிறகு).*
3. அவரது விசுவாசமும் கீழ்படிதலும் சோதிக்கப்பட்ட <u>பிறகு</u>, தேவன் ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிகளுக்கும் தங்களது சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள் வார்கள் என வாக்குப்பண்ணினார் (ஆதி. 22:16–17 *இவைகளை நீ செய்தபடியால்).*

சகரியா எலிசபெத் ஆகிய இருவரின் வாழ்க்கையிலும், தேவனது எல்லாக் கட்டளை களுக்கும் நியமங்களுக்கும் அவர்கள் கீழ்ப்படிந்து, நீதியிலும் உண்மையிலும் நடந்த நடக்கை பலனளிக்காமல் வீண்போகவில்லை (லூக். 1:6). இப்போது அவர்கள் வயது முதிர்ந்தவர் களாயிருந்தார்கள். நீண்ட நாட்களுக்கு முன்பு, ஒரு குழந்தைக்காக ஜெபித்தும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தரை நேசித்து, அவருக்கு உண்மையாக நடந்து வந்ததினால், இப்பொழுது அதை அவர்கள் ஒருவேளை மறந்தும் இருந்திருக்க வேண்டும் (லூக். 1:6). இரண்டாவது மட்ட நிலை முன்தீர்மானம் (தேவனது விசேஷ வேலை) அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அவர்களது வாழ்வின் ஆசீர்வாதங்களை அறிவிக்க, காபிரியேல் என்ற ஒரு தூதன் அனுப்பப் பட்டான். அவனுடைய பெற்றோருடைய உண்மையின் எல்லா பலன்களையும் ஆசீர்வாதங் களையும் அறுவடைசெய்ய, ஒரு குழந்தையை தேவன் பலனாக அருளினார்; அவ்விதமாகவே யோவான் ஸ்ஞானகன் என்ற அந்த குழந்தை தனது பெற்றோரால் உருவாக்கப்பட்ட இரண்டாம் மட்ட நிலை முன்தீர்மானத்தின் பாதையிலே நடந்து, குழந்தையாயிருக்கும்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

போதே ஆவியானவரால் நிறைந்திருந்தான் (லூக். 1:13—17; 2:41). தேவனைப் பிரியப்படுத்தி, நமது வாழ்க்கைகளில் சரியான தெரிந்தெடுப்புகளை செய்வதன் மூலமாக, நாம் முதல் மட்ட நிலை மற்றும் இரண்டாம் மட்ட நிலை ஆகிய இரண்டின் முன்தீர்மானத்தை, நமது தலைமுறைகளுக்கு தொடர்ந்து வர முன்வைத்துச் செல்வது சாத்தியமானதே.

முதல் மட்ட நிலை மற்றும் இரண்டாம் மட்ட நிலை முன்தீர்மானம் என்ற அதே கொள்கை, தொடர்ந்து தவறான தெரிந்தெடுப்புகளை செய்வதினால், எதிர்மறையாகவும் செயல்படுகிறது. மோசேயின் மூலமாய் நடைபெற்ற கர்த்தருடைய வேலையை பார்வோன் எதிர்த்து நின்ற போது, அப்படிப்பட்ட காரியம் நேரிட்டது. இரண்டாம் மட்ட நிலை விசேஷ நியாயத்தீர்ப்பை தேவன் பார்வோனுக்கு அறிவித்தபோது, அவன் மோசேயிக்கு ஏற்கனவே ஆறுமுறை எதிர்த்து நின்று, ஆறு வாதைகளின் விளைவை சந்தித்திருந்தான் (யாத். 9:16; ரோம. 9:17). ஒருவர் தொடர்ந்து தனது சுய தெரிந்தெடுப்பினால் தேவனுக்கு எதிர்த்து நின்றுகொண்டே இருக்கும் பொழுது, அது மரணத்திற்கேதுவான பாவத்திற்கும் நம்மை நடத்துகிறது. அதற்கு மேல் மீட்பு வேறொன்றுமில்லை (மத். 12:31; எபி. 6:6; 1 யோவா. 5:16). பாவங்கள் பின்வருமாறு வகைப் படுத்தப்படிருக்கிறதை விளங்கிக்கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம், தேவனை மறுதலித்து கிறிஸ்துவை புறக்கணித்தல், மரணத்திற்கேதுவான பாவம் இவைகள் எல்லாம் எதேச்சையாக அல்லது ஏதோ ஒரு முறை நடக்கும் பலவீனமான சோதனை வேளைகளாக இல்லாமல், வேண்டுமென்றே மாறாத ஒரே தீர்மானமாய் தொடர்ந்து ஒருவரது சுயசித்தத்தின் முழு விளங்கிக் கொள்ளுதலோடும் மற்றும் அதன் பிரதிவினை களின் விளங்கிக்கொள்ளுதலோடும் எடுக்கப்படும் தெரிந்தெடுப்பாகும் (பாவம் மற்றும் தீமையின் ஒரு நடைமுறை, ஏதோ பாவத்தில் விழுந்துவிடுவதல்ல) அது இரண்டாம் மட்ட நிலை நியாயத்தீர்ப்புக்கு நடத்துகிறது (எபி. 10:26).

முன்தீர்மானம் மற்றும் சுய சித்தம் ஆகிய மேற்கூறிய சத்தியங்களை நாம் அலசி ஆராயும்போது, கால்வினிசம் மற்றும் அர்மேனிசம் ஆகியவற்றிற்கு இடையே உண்டான பல நூற்றாண்டு வாக்குவாதத்தை, இந்த சத்தியங்களை ஒன்று சேர்த்து ஒற்றுமைப்படுத்துவதினால் கடைசியாக இந்த இரகசியத்தை நாம் தீர்த்துவைக்க முடியும். இரண்டு பகுதிகளையும் (மக்கள்—முன்தீர்மானத்திலிருந்து நிகழ்ச்சி—முன்தீர்மானத்தை வித்தியாசப்படுத்துவதினால்) இரண்டு மட்ட நிலைகளின் முன்தீர்மானத்தையும் (ஒருவரது பின்சந்திக்கு பாய்ந்து கடந்து வருவதின் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்வில் உள்ள மாறுபட்ட சுய தெரிந்தெடுப்பு களின் நல் பிரதிவினைகளின் அடிப்படையின்மேல் சார்ந்து) விளங்கிக்கொண்டு, நாம் இந்த சத்தியங்களை ஒன்றாக ஒன்று சேர்த்து ஒற்றுமைப்படுத்த முடியும். இரண்டு சத்தியங்கள் ஒன்று சேர்ந்து வரும்போது, நாம் அவைகளின் உறவை காண்பிக்க வேண்டியது அவசியமா கிறது: சுயசித்தம் என்பது இரண்டு மட்ட நிலைகளினுடைய முன்தீர்மானத்தின் ஒரு பகுதியாகிறது (அதன் பொருள் என்னவெனில், முன்தீர்மானத்திற்கு ஒரு வட்டத்தை வரைந்து, வேறொரு வட்டத்தை சுயசித்திற்கு வரைந்தால், சுயசித்தத்திற்குரிய வட்டம் முன் தீர்மான வட்டத்திற்குள் வரையப்படுகிறது).

புதிய விசுவாசிகள் சுலபமாக விளங்கிக்கொள்வதற்காக, நாங்கள் இந்த மகா பெரிய உபதேச சத்தியங்களை எளிதாக்கியுள்ளோம் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். இந்த சத்தி யங்களின் பல பகுதிகளை ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டியதாகிறது: உதாரணமாக, தேவன் திட்டம் A ஒன்றை மட்டும் உடையவரல்ல. ஆனால், தேவன் பல்நோக்கு திட்டங்களை உடையவராயிருக்கிறார். அவைகள் நாம் நம் வாழ்வில் எடுக்கும் குறிப்பான மற்றும் எடுக்கக்கூடிய வாய்ப்புகளுள்ள ஒவ்வொரு தெரிந்தெடுப்புகளின் தருணங்களாகும்; தேவன் திட்டம் A முதல் திட்டம் Z வரை திட்டங்களை சுயதெரிந்தெடுப்புகளோடு ஒவ்வொரு தனி வாழ்விற்கும் வைத்துள்ளார். நாம் தேவனை விட அதிகமாக யோசிக்கவோ, தெரிந்தெடுக்கவோ (அவர் நினைக்காத ஒன்றை தெரிந்தெடுத்தல்) முடியவே முடியாது. நாம் எல்லாரும் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்தீர்மானிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் நமது தெரிந்தெடுப்புகளின் மூலமாக, நன்மைக்கோ அல்லது தீமைக்கோ விசேஷித்த இரண்டாம் மட்ட நிலை முன்தீர்மானத்திற்கு நாம் கடந்து செல்ல ஆரம்பிக்கிறோம்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 4*

# தீமை இருக்கிறதை விளங்கிக்கொள்ளுதல்

தேவன் என்று ஒருவர் இருந்து, அவர் நல்ல தேவனாக இருந்தால் ஏன் இப்படி நடக்கிறது என்றும், அவர் பூமியில் அநேக தீமைகள் தொடர அனுமதித்திருக்கிறார் என்றும், அநேகர் எப்பொழுதும் கேட்கின்றனர். சுய சித்தம் உருவாக்கப்பட்டபோது, சுய தெரிந்தெடுப்பின் விளைவாக வரும் மாற்று நிகழ்வுகாட்சிகளினுடைய எதிர்விளைவுகளின் முழு வேலைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அந்தக் கேள்விகள் புறக்கணிக்கின்றன – இல்லா விட்டால் சுய தெரிந்தெடுப்பு என்பது வெறும் கள்ளத்தனமான போலியாகவே இருக்கும்; அப்படியென்றால், ஒரு தனிநபர் எப்பொழுதெல்லாம் தவறான சுய தெரிந்தெடுப்பை செய்கிறாரோ, அப்பொழுதெல்லாம் சரியானவைகளின் எதிரான முழு அனுபவத்தையும் அனுபவிக்காமல் உடனடியாக அவர் கொல்லப்பட்டு அல்லது சிறையிலடைக்கப்படுவது போலாகும். பல்வேறு வகைப்பட்ட தவறுகளும் பல்வேறு வகைப்பட்ட தீமைகளுமுள்ளன. ஒவ்வொன்றிற்காகவும் எளிய ஒரு மரண தண்டனையாகவோ அல்லது சிறைவாசமாகவோ அவைகளை எல்லாம் பொதுவான தாகச் சொல்லக்கூடாது (1 யோவா. 5:16).

தவறாக சிகப்பு விளக்கைக் கடந்து செல்வதால், மரணதண்டனையோ அல்லது வாழ்நாள் முழுவதும் சிறைவாசமோ என்று நியாயந்தீர்க்கப்படுவதை கற்பனை செய்துபாருங்கள். இரண்டு ரூபாய் திருடிய ஒரு சிறிய திருடன், கொலையாளியைப்போல மரண தண்டனை அனுபவிப் பதாக அல்லது அதே சிறைச்சாலையில் பங்கு பெறுவதாகவும் கற்பனை செய்து பாருங்கள். முதலாவதாக, சமுதாயத்தை நடத்துவதற்கு அநேகர் உயிரோடு இருக்கமாட்டார்கள். இரண்டாவதாக, உள்ளாக நல்லவர்களாயிருப்பதற்கு பதிலாக, மரண அல்லது சிறைவாச பயத்தினால், மீதமுள்ள நல்லவர்களும் வெளிப்பிரகாரமாகவே நல்லவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய தவறாக செய்கைகள், தங்களையும் மற்றவர்களையும் காயப்படுத்தி தீமையை விளைவிக்கும் என்பதை விளங்கியிருப்பார்கள். கண்ணுக்குகண் கையிக்குக்கை என்று எடுக்க உலகில் உள்ள ஒவ்வொருவரும் செயல்படுவார்களானால், அநேக ஜனங்கள் ஒரு கண்ணுடனோ அல்லது குருடாகவோ (இரண்டு முறை தவறு செய்ததினால்) இருப்பதோடு, உறுப்புகளை இழந்த அநேகரும் இருப்பார்கள்.

### *இருள் என்பது ஒளியில்லாமை*

இன்று இந்த உலகில் இருக்கும் எல்லா தீமைகளும், மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிளிருந்து செய்யப்பட்ட எல்லா தவறான தெரிந்தெடுப்புகளின் ஒட்டமொத்தமேயாகும் (ரோம. 5:12–14). இந்த உலகத் திலிருக்கும் தீமைக்காக நாம் *ஒருபோதும்* தேவனை குற்றம் சாட்டவே முடியாது; அதிக பட்சமாக உங்களது முற்பிதாக்களை குற்றம் சாட்ட முடியும் (நற்காரியங்களையும் அவர்கள் நமக்கு கையளித்திருப்பதால், அவ்வாறு செய்வது நல்ல காரியமல்ல). தேவன் தீமையைச் சிருஷ்டிக்க வேண்டிய அவசியமில்லை. வெளிச்சம் இல்லாதபோது எப்படி இருள் வந்துவிடுகிறதோ, அப்படியே தவறான தெரிந்தெடுப்புகள் செய்யப்பட்டபொழுது தீமை வர ஆரம்பித்துவிட்டது. தீமை இருப்பதற்காக ஒருவரும் தேவனைக் குற்றப்படுத்த முடியாதாகையால், ஒரே பகுத்தறிவுக் கேள்வி என்னவெனில், தேவன் இன்னும் ஏன் அதை அதிக கடினமாகக் கையாண்டு, குற்றமற்றவர்களை அதிக கருத்தாக ஏன் பாதுகாக்க முயலவில்லை? என்ப தாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், தேவனது தீமையை கையாளும் நடைபாங்கையும் வழிமுறையையும் நாம் கேள்விகேட்கிறோம்.

இந்த உலகத்திலே மலிந்து கிடப்பதுபோலக் காணப்படும் எல்லா சோதனைகளும் பிரச்ச னைகளும் இல்லாத 'பாவமற்ற' வட்டாரத்திலே, நமது மனித கண்ணோட்டத்திலிருந்து வாழவே செய்கிறோம். தேவ கண்ணோட்டத்திலிருந்து, எல்லா தீமைகளின் முடிவையும் அவர் காண முடியும், மற்றும் நாம் தீமையை சந்திப்பதும் மேற்கொள்வதும், நம்மை எப்படி உறுதியானவர்களாக மாற்றுகிறது என்பதையும் கூட அவர் காண முடியும். மிகச்சிறிய பாவம் மற்றும் தீமையிலிருந்தும் எல்லா நேரத்திலும் அவர் பாதுகாக்க வேண்டிய பலவீன ஜன

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கும்பலை அவர் விரும்பியிருந்தால், எல்லா மூலைகளிலும் தேவதூத போலீஸ்காரர்களுடன் சர்வாதிகார சமுதாயத்தை அவர் சிருஷ்டித்திருந்திருப்பார். எனினும், தாங்களே போலீசிடம் வந்து, தீமையின் மத்தியிலும் நல்லதை தெரிந்தெடுக்கும் உறுதியான சமுதாயத்தை அவர் விரும்பியிருந்தால், நம்மை நாமே ஆளுகை செய்ய வெறும் உபகரணங்களை மட்டும் நமக்கு அவர்கொடுத்து, நாம் சொந்தமாக தற்சார்பில் (காணமுடியாத நிலையில் அவர் உதவினாலும்) வளரும் சுதந்தரத்தையும் விடுதலையையும் நமக்கு அனுமதிப்பார். சுயசித்தத்தின் சிருஷ்டியாக ஒருவேளை நீங்கள் இருந்து, உங்களது சுதந்தரத்தையும் விடுதலையையும் முன்னேற்றமடைய செய்ய நீங்கள் விரும்பினால், எந்த சமுதாயத்தை நீங்கள் தெரிந்தெடுப்பீர்கள்?

தேவனுடைய இலக்கு என்னவெனில், அவரைப்போல நாம் வளர வேண்டும் என்பதே. இவ்விதமாகச் செய்யப்பட, நமது குணாதிசயத்தில் வளர்ந்து முன்னேறி, இந்த பூரணமற்ற பாவ உலகத்தில் உள்ள நிச்சயமற்ற நிலைகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்க நாம் அனுமதிக்கப்பட வேண்டும்:

1. சத்தியத்திற்கான அன்பிலே நாம் வளர உற்சாகப்படுத்தப்பட வேண்டுமானால், பிழையும் நேர்மையின்மையும் உள்ள நிலையில் சத்தியத்தை தெரிந்தெடுக்க நாம் பெலனடைகிறோம்.
2. விசுவாசத்திலே நாம் வளரவேண்டுமானால், அறிவு மட்டுப்படுத்தப்பட்டுள்ள மற்றும் பயமுள்ள சுற்றுப்புற சூழ்நிலையில் நாம் வளர வேண்டும்.
3. நம்பிக்கையில் நாம் பெருக, நிச்சயமற்ற தன்மையும் பாதுகாப்பற்ற தன்மையுள்ள இடத்தில்தான் நாம் வளர வேண்டும்.
4. நன்றியுள்ள நல்லுறவில் முன்னேற்றமடைய, தெரிந்தெடுப்பில் வாய்ப்புள்ள காட்டிக் கொடுத்தலும், விட்டுப்பிரிந்துபோதலும் உள்ள சுற்றுப்புற சூழ்நிலையில்தான் நாம் வளர வேண்டும்.
5. தைரியத்தில் முன்னேற்றமடைய, கடின சூழ்நிலைகளும் ஏமாற்றங்களும் பெருகி இருக்கும் உலகில் நாம் வளரவேண்டும்.

மேலுள்ள பட்டியல் தொடர்ந்து நீண்டுகொண்டே செல்கிறது. ஆனால், ஏன் பாவமும் தீமையும் உடனடியாக நீக்கப்படாமல் இருப்பதின் படமும் விளங்கிக்கொள்ளுதலும், நாம் விழ காரணமாகும் அல்லது பிரச்சனையான வெறும் தடைகற்களாக அல்ல, நாம் அவைகளில் வெற்றிபெறவும் மேற்கொள்ளவும் உதவும் தருணங்களாக அவைகள் இருக்கின்றன. நமது மட்டுபாடுள்ள மானிட வழியிலே நமது குழந்தைகளை நாம் படிப்பில் பயிற்றுவிக்கும்போது, அவர்களுக்காக நாம் வீட்டுப்பாடங்களைச் செய்வதில்லை; மாறாக அவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் போராடி மல்யுத்தம் செய்வதுபோல, தாங்களே விளங்கிக் கொள்ளுதலுக்கு வருவதை நாம் கவனித்துப் பார்க்கிறோம். அவர்களுக்கு அவசியமான உபகரணங்களையும் கற்றுக்கொள்வதற்கு தேவையான உதவி பெற்றுக்கொள்வதையும், சரியான வெற்றி வாய்ப்புக்குக் கொடுத்து உறுதி செய்கிறோம்.

ஒவ்வொரு பிரச்சனை, சோதனை, பரீட்சைகளிலுமிருந்து நாம் தப்பிக்கும் வழியை உண்டாக்க தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (1 கொரி. 10:13). சிங்ககுகையி *லிருந்து* அவர் நம்மை இரட்சிக்காமல், சிங்கக் குகையின் *மூலமாக* அவர் நம்மை இரட்சிக்கிறார். அந்த அனுபவத்தில் நாம் சிறந்தவர்களாகிறோம். இது நம்மால் முடியாது என்று நாம் முறுமுறுப்போமானால், இயேசுவாகிய தனது குமாரனை அவர் அனுப்பி, நமக்கு வழியை காண்பிக்க அவரது வார்த்தையை நமக்கு கொடுத்து, நம்மை பெலப்படுத்த அவரது ஆவியானவரையும் கொடுத்திருக்கிறார். நமக்கு உபகரணத்தையும் கற்கும் உதவியையும் நமக்கு (பரிசுத்த ஆவியானவர் என்ற தனிப்பட்ட உதவியாளரையும் நமக்கு) கொடுத்திருக்கிறார். அவர் நமக்கு கொடுத்த எல்லாவற்றையும் நாம் பெற்று பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் அது நமது குற்றமாகும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*நாம் அனுமதிக்கிறதை தேவனும் அனுமதிக்கிறார்*

நாம் வேதத்தை விசேஷமாக பழைய ஏற்பாட்டை வாசிக்கும்போது, அங்கே அனுமதிக்கும் காலம் (செய்யபாட்டுக் காலம்) இருப்பதையும், அவர் ஊக்கமாக சிலதை *செய்ததற்கு* மாறாக, அங்கு தேவன் அதை அனுமதிக்கிறார். உதாரணமாக 2 சாமுவேல் 24:1ல் கர்த்தருடைய கோபம் இஸ்ரலேலுக்கு விரோதமாக எழும்பி, அவர்களை தாவீது தொகையிடுவதற்கு ஏவினது 1 நாளா. 21:1ல் (தேவனல்ல) பிசாசு தாவீதிற்கு விரோதமாக ஏவினது என்று தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. தேவன் செய்த ஒரு காரியம், தேவன் அது நடைபெற அதை அனுமதித்தது மட்டுமே. 1 நாளா. 10:14ல் கர்த்தர் சவுலைக் கொன்றுபோட்டார் என்று சொல்கிறது. இதற்கு முந்தின நிகழ்ச்சியிலும் மற்ற வேத பகுதிகளிலுமிருந்து, சவுல் தன் பட்டயத்தின்மேலே விழுந்தார் என்றும், கொஞ்சம் உயிர் மீதியாயிருக்கையில் அமலேக்கியன் ஒருவன் தன்னை கொல்லும்படி சவுல் அவனைக் கேட்டுக்கொண்டார் என்றும், நாம் அறிந்துகொள்ளுகிறோம்; சவுல் கொல்லப்படும்படி தேவன் மட்டுமே அனுமதித்தார் (அனுமதிக்கும் காலம்).

இந்த விளங்கிக்கொள்ளுதலோடு, எல்லா நேரங்களிலும் தேவனே நம்மை ஜாக்கிரதை யாக பாதுகாத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், சில நேரங்களில் சாத்தான் கேட்கும் போது, தேவன் நம்மை சுற்றியுள்ள பாதுகாப்பின் வேலியை அவன் நம்மை சோதிக்கவும் பரீட்சிக்கவும் எடுத்துவிடுகிறார் (யோபு 1:9–12). வேதத்தை நாம் கருத்தாய் படிக்கும்போது, இரண்டு காரணங்களுக்காகவே ஒவ்வொரு முறையும் அனுமதியளிக்கப்படுவதை நாம் கவனிக்க முடியும்: நமது இருதயங்களில் இருக்கும் ஏதோ ஒன்று பரீட்சிக்கப்பட வேண்டும். மற்றும் தப்பித்துப்போக தேவன் ஏற்கனவே வழியை உண்டாக்கி வைத்துள்ளார் (உபா. 8:2; 1 கொரி. 10:13). வனாந்திரத்திலே நமது ஆண்டவராகிய இயேசுவும் கூட சோதிக்கப்பட வேண்டியதாயிருந்தது (மத். 4:1). எந்த சோதனையையோ பரீட்சையையோ வெற்றியாக நாம் மேற்கொள்ளும்போது, தேவன் எப்பொழுதுமே பிரதிபலன்களினால் நம்மை ஆசீர்வதிக்கிறார் (யாக். 1:12; 1 பேது. 4:12–13).

காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது (நீதி. 26:2). தனிப்பாவங்களோ காரணங்களோ எப்பொழுதும் இல்லாமல் இருந்தாலும், இந்த உலகம் முழுமையாக போதுமான அளவுக்கு குறைவுகளை உள்ளடக்கி இருப்பது நமக்குத் தெரியும். அவைகள் நமது குணாதிசயங்களில் நாம் வளருவதற்கு, இந்த உலகில் வாழும் எந்த ஒரு மனிதனுக்கும் சோதனைகள், கஷ்டங்கள், பரீட்சைகள், இவைகளை அனுபவிக்க அனுமதிக்கின்றன. குணாதிசய கட்டுமானத்திற்கு குறுக்கு வழி ஏதும் இல்லை. உபத்திரவங்களின் வழியாகவே இது நடைபெறும் (ரோம. 5:3). இந்த உலகத்திலே மனித இனத்தின் ஆரம்பமுதல், மனுக்குலம் அனுமதித்ததை மற்றும் நமது வாழ்வில் நாம் சில நேரங்களில் அனுமதித்ததை, தேவன் நமது சுய தெரிந்தெடுப்பு களையும் விடுதலைகளையும் மதிக்கிறபடியினால், அவரும் அனுமதிக்க வேண்டியுள்ளது. ஆனால், நன்மைக்காக நாம் அவரிடம் நம்மை சரணாகதியாக ஒப்புவிக்கும் ஒவ்வொரு சூழ்நிலையையும், தேவன் பயன்படுத்துகிறார்; இவ்விதமாக தீமையை நன்மையினால் மேற்கொள்கிறார் (மத். 5:43–48; ரோம. 8:28).

*பாவத்தின் வேகமும் நீதியின் வேகமும்*

முன்தீர்மானம் மற்றும் சுயசித்தம் என்ற முந்தின அத்தியாயத்தில் நாம் பார்த்ததுபோல, ஒரு நபரின் தெரிந்தெடுப்புகள் அவருக்குப் பின்வரும் சந்ததியையும் அவருடைய நேரத்தில் இருந்து பாதிக்கின்றது – அடுத்த தலைமுறைக்கு அது கடினமாகவோ இலகுவாகவோ மாற்றுகிறது. அந்த சக்தி குறையும் முன்பு எவ்வளவு தூரம் அது பாதிப்பை ஏற்படுத்துகிறது? ஒரு பரப்பின் மேல் நேரத்தை இன்னுமொரு பரிமாணமாக கற்பனை செய்யுங்கள். ஒரு பாவம் செய்யப்படும்பொழுது, அது உடனடியாக ஒரு குறிப்பிட்ட வேகத்தில் பல தலைமுறை களை பாதிக்கிறது; மூன்றாம் நான்காம் தலைமுறை வரைக்கும் (ஆதி. 15:16; யாத். 20:5; 34:7; எண். 14:18; உபா. 5:9). அடுத்த பல தலைமுறைகள் அந்தப் பாவத்திற்கு பொறுப்பாளிகள் என்று அர்த்தமல்ல. ஆனால், அந்தப் பாவத்தின் பிரதிவினைகளால்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பாதிக்கப்படுகிறார்கள். இது இன்னும் அதிகமாக அழுத்தத்தை உண்டாக்கி, அடுத்த தலை முறைக்கு இன்னும் அதிக கடினத்தை உண்டாக்குகிறது. எனினும் அவர்கள் சரியானவை களை இன்னும் தெரிந்தெடுத்து தேவனைப் பின்பற்ற சுயதெரிந்தெடுப்புகள் அவர்களுக்கு ஆயத்தமாய் உள்ளன.

இந்தக் காரணத்தினால், ராஜாக்களின் கதைகளிலே சிலநேரங்களில் தொடர்ந்து மோசமான ராஜாக்களைப் பார்க்கிறோம் (1 மற்றும் 2 இராஜா.). எனினும் நல்ல ஒரு ராஜா இன்னும் எழும்பி தேசத்தை தலைகீழாக மாற்ற முடியும். தனது அயலானாகிய நாபோத்தின் திராட்சத் தோட்டத்தைத் திருடி, அவனைக் கொலைசெய்ததில் மோசமான ஆகாப் ராஜாவின் ஒரு மனந்திரும்புதலின் அனுபவத்தினால், ஆகாபின் நாட்களில் அந்தப் பேரிடர் வராமல் அவனது குமாரனின் நாட்களில் வருமென்று தேவன் சொன்னார் (1 இராஜா. 21:25–29). நியாயத்தீர்ப்பின் வாக்குமூலத்தையல்ல, ஆனால் தேவன் ஒரு கூற்றின் வாக்குமூலத்தையே கொடுக்கிறார் (மூன்றாம் நான்காம் தலைமுறைக்கு பாவம் உடனடியாக பிரயாணம் செய்வதை அவர் அறிந்திருந்தார்).

நியாயத்தீர்ப்பின் வாக்குமூலமாகவே ஒருவேளை அது இருந்தாலும், தேவனது நியாயத் தீர்ப்புகளெல்லாம் மனந்திரும்புதலுக்கும் பரிந்துபேசுதலுக்கும் உட்பட்டதாகவே இருக்கின்றன. (தீர்க்கதரிசனம் கூட அதை அளிப்பதாக காணப்படாவிட்டாலும்); உதாரணத்திற்கு, நினிவே மக்கள் மனந்திரும்பி நியாயந்தீர்ப்புக்கு தப்பினபோது, யோனா ஆச்சாரியப்பட்டார். தேவனது கிருபை இரக்கத்தின் மீது அவரும் கலங்கினவராயிருந்தார் (யோனா 3:10; 4:1). ஆகாபின் மகன் மனந்திரும்பியிருந்தால், ஆகாபின் பேரனிடம் கடந்து சென்றிருக்கும், பேரனும் பேரனின் மகனும் மனந்திரும்பியிருந்தால், அந்தப் பாவத்தின் சக்தியானது முழுவதுமாக சிதறடிக்கப்பட்டிருக்கும். இதை விளங்கிக்கொண்டு, முந்தின தலைமுறையின் பாவத்தினால் பின்வரும் தலைமுறைகளுக்கு மிகவும் கடினமானதாக இது இருந்தாலும், சுயதெரிந்தெடுப்பும் சுயசித்தமும் இன்னும் அப்படியே பத்திரமாயிருப்பதால், பின்வரும் தலைமுறையினர் தேவனிடத்தில் முழு இருதயத்தோடு திரும்புவதானது, முந்தின தலைமுறையின் பாவங்களை நீக்கிவிட முடியும்.

மெய்யாகவே, கிருபை யுகத்தின் காலத்திலே, ஒரு நபர் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், முற் பிதாக்களினுடைய எல்லாப் பாவங்களும் உடனடியாக நீக்கப்பட்டு விடுகின்றன; பழையவைகள் ஒழிந்துபோயின. இதோ, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17). ஏனெனில், விசுவாசத்தின் மூலமாக கிருபையின் சுவிசேஷம் உயர்வான பிரமாணத்தினால் செயல்படுவதனால், பாவம் மரணம் என்ற தாழ்வான பிரமாணத்தை அது நீக்கிப்போடுகிறது (ரோம. 8:1–2).

எதிர்பக்கத்திலே ஒரு நபர் நீதியிலே நடக்கும்போது, நீதியின் ஆசீர்வாதங்களும் நல்ல தாக்கங்களும் ஆயிரம் தலைமுறைகளை நல்லமுறையில் பாதிக்கும் வகையில் காலத்தைக் கடந்து செல்கிறது (யாத். 20:6; 34:7; உபா. 5:10 *ஆயிரங்கள் – ஆயிரத்திற்கு மேலேயும் இருக்க முடியும். ஆனால், செயல் விளக்க உதாரணத்தின் நோக்கத்திற்காகவே ஆயிரம் என்பதை உபயோகிக்கிறோம்).* நேர பரிமாணத்தைக் கடந்து எதிர்கால தலைமுறையினரை நல்ல முறையில் பாதித்து பயணிக்கும் நீதியின் வேகமானது, பாவத்தின் வேகத்தைக் காட்டிலும் மிக மிக வேகமாக செல்கிறது என்பதுதான் அதின் அர்த்தமாகிறது; எவ்வளவு படுமோசமானதாக, எவ்வளவு தீமையானதாக சுதந்தரிக்கப்பட்ட சூழ்நிலை அல்லது பாவ சுபாவம் இருந்தாலும், சுயதெரிந்தெடுப்பினால் (மெய்யாகவே, கிறிஸ்துவின் உதவியுடன்) நமது எதிர்காலத்தையும், பாவத்தின் விளைவுகளைக் காட்டிலும் மிகவும் பலமாக நாம் மாற்ற முடியும். தொடர்ந்து செய்யப்படும் ஒவ்வொரு நீதியான செயலும் ஒரு ஆசீர்வாத

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அலையை உண்டாக்குகிறது. அது சாப அலையை மேற்கொண்டு, இயங்காமற்கூட செய்து அதை மேற்கொள்கிறது. அதோடு ஆயிரங்களான தலைமுறைகளோடு தங்கியிருக்கும் வல்லமையையும் உடையதாயிருக்கிறது.

தீமையைக் காட்டிலும் நன்மை மிகவும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. பாவத்தைக் காட்டிலும் நீதி மிகவும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. இருட்டின் ஒன்றுமில்லாத் தன்மையை விட வெளிச்சம் மிகவும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. நமக்காக கிறிஸ்து பாவப்பரிகார பலியானதில், நியாயப்பிரமாணத்தினால் சபிக்கப்பட்ட எல்லாவற்றையும் தனக்குள் உள்வாங்கிக் கொண்டு, அவர் கல்வாரி சிலுவையிலே மரித்தபோது, அவரது ஒரே வல்லமையுள்ள செயலால், முழுவதுமாக நிறுத்தப்படவே முடியாத நீதியின் விசையாக அதை அவர் விடுவித்துவிட்டார். கிறிஸ்துவிலுள்ள நீதியின் ஈவாகிய விசையானது, அதன் பாதையில் இருந்த மரணத்தையும் ஒவ்வொரு தீமையையும் ஒன்றுமில்லாமல் போகச் செய்துவிட்டது. நாம் தேவனுடைய நீதியாகவே ஆகிவிடுவதற்காக, அவர் சிலுவையில் பாவத்தை எடுத்துக் கொண்டார் (2 கொரி. 5:21). இப்பொழுது நீதியாகிய ஈவின் மூலமாக, கிறிஸ்துவின் மூலமாக வாழ்வில் நாம் ஆளுகை செய்ய முடியும் (ரோம. 5:17). பாவம் பெருகி நிரம்பின இடத்திலே, கிருபை மிகவும் அதிகமாய் பெருகி நிரம்பிற்று. ஆதலால் பாவம் மரணத்திற்கு ஏதுவாக ஆண்டு கொண்டதுபோல, கிருபையானது நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது (ரோம. 5:20–21). ஆமென்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

# APPENDIX

***Greek Text of Apostles' Creed***

Πιστεύω εις Θεον Πατερα, παντοκράτορα, ποιητην ουρανου και γης.

Και (εις) `Ιησουν Χριστον, υίον αυτου τον μονογενη, τον κύριον ήμων, τον συλληφθέντα εκ πνεύματοσ άγίου, γεννηθέντα εκ Μαρίας της παρθένου, παθόντα επι Ποντίου Πιλάτου, σταυρωθέντα, θανόντα, και ταφέντα, κατελθόντα εις τα κατώτατα, τη τρίτη `ημέρα `αναστάντα `απο των νεκρων, `ανελθόντα εις τους ουρανούς, καθεζόμενον εν δεξια θεου πατρος παντο δυνάμου, εκειθεν ερχόμενον κρϊναι ζωντας και νεκρούς.

Πιστεύω εις το Πνυμα το `Αγιον, αγίαν καθολικην εκκλησίαν, αγίων κοινωνίαν, άφεσιν αμαρτιων, σαρκος ανάστασιν, ξωήν αιώνιον. Αμήν.

***Latin Text of Apostles' Creed (around 700 AD)***

Credo in Deum Patrem omnipotentem; Creatorem coeli et terrae.

Et in Jesum Christum, Filium ejus unicum, Dominum nostrum; qui conceptus est de Spiritu Sancto, natus ex Maria virgine; passus sub Pontio Pilato, crucifixus, mortuus, et sepultus; descendit ad inferna; tertia die resurrexit a mortuis; ascendit ad coelos; sedet ad dexteram Dei Patris omnipotentis; inde venturus (est) judicare vivos et mortuos.

Credo in Spiritum Sanctum; sanctam ecclesiam catholicam; sanctorum communionem; remissionem peccatorum; carnis resurrectionem; vitam oeternam. Amen.

***French Text of Apostles' Creed (Galican version around sixth century)***

Je crois en Dieu, le Père tout-puissant, créateur du ciel et de la terre.

Et en Jésus-Christ, son Fils unique, notre Seigneur, qui a été conçu de Saint-Esprit, et qui est né de la Vierge Marie. Il a souffert sous Ponce Pilate, il a été crucifié, il est mort, il a été enseveli, il est descendu aux enfers. Le troisième jour il est ressuscité des morts, il est monté aux cieux, il siège à la droite de Dieu. Il viendra de là pour juger les vivants et les morts.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

Je crois en l'Esprit-Saint. Je crois la Sainte Eglise catholique, la communion des saints, la rémission des péchés, la résurrection de la chair, et la vie éternelle. Amen

***The text of the Athanasian Creed (Marquess of Bute's English translation):***

Whosoever will be saved, before all things it is necessary that he hold the Catholic Faith. Which Faith except everyone do keep whole and undefiled, without doubt he shall perish everlastingly. And the Catholic Faith is this, that we worship one God in Trinity and Trinity in Unity. Neither confounding the Persons, nor dividing the Substance. For there is one Person of the Father, another of the Son, and another of the Holy Ghost. But the Godhead of the Father, of the Son and of the Holy Ghost is all One, the Glory Equal, the Majesty Co-Eternal. Such as the Father is, such is the Son, and such is the Holy Ghost. The Father Uncreate, the Son Uncreate, and the Holy Ghost Uncreate. The Father Incomprehensible, the Son Incomprehensible, and the Holy Ghost Incomprehensible. The Father Eternal, the Son Eternal, and the Holy Ghost Eternal and yet they are not Three Eternals but One Eternal. As also there are not Three Uncreated, nor Three Incomprehensibles, but One Uncreated, and One Uncomprehensible. So likewise the Father is Almighty, the Son Almighty, and the Holy Ghost Almighty. And yet they are not Three Almighties but One Almighty.

So the Father is God, the Son is God, and the Holy Ghost is God. And yet they are not Three Gods, but One God. So likewise the Father is Lord, the Son Lord, and the Holy Ghost Lord. And yet not Three Lords but One Lord. For, like as we are compelled by the Christian verity to acknowledge every Person by Himself to be God and Lord, so are we forbidden by the Catholic Religion to say, there be Three Gods or Three Lords. The Father is made of none, neither created, nor begotten. The Son is of the Father alone; not made, nor created, but begotten. The Holy Ghost is of the Father, and of the Son neither made, nor created, nor begotten, but proceeding.

So there is One Father, not Three Fathers; one Son, not Three Sons; One Holy Ghost, not Three Holy Ghosts. And in this Trinity none is afore or after Other, None is greater or less than Another, but the whole Three Persons are Co-eternal together, and Co-equal. So that in all things, as is aforesaid, the Unity is Trinity, and the Trinity is Unity is to be worshipped. He therefore that will be saved, must thus think of the Trinity.

Furthermore, it is necessary to everlasting Salvation, that he also believe rightly the Incarnation of our Lord Jesus Christ. For the right Faith is, that

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

we believe and confess, that our Lord Jesus Christ, the Son of God, is God and Man.

God, of the substance of the Father, begotten before the worlds; and Man, of the substance of His mother, born into the world. Perfect God and Perfect Man, of a reasonable Soul and human Flesh subsisting. Equal to the Father as touching His Godhead, and inferior to the Father as touching His Manhood. Who, although He be God and Man, yet He is not two, but One Christ. One, not by conversion of the Godhead into Flesh, but by taking of the Manhood into God. One altogether, not by confusion of substance, but by Unity of Person. For as the reasonable soul and flesh is one Man, so God and Man is one Christ. Who suffered for our salvation, descended into Hell, rose again the third day from the dead. He ascended into Heaven, He sitteth on the right hand of the Father, God Almighty, from whence he shall come to judge the quick and the dead. At whose coming all men shall rise again with their bodies, and shall give account for their own works. And they that have done good shall go into life everlasting, and they that have done evil into everlasting fire. This is the Catholic Faith, which except a man believe faithfully and firmly, he cannot be saved.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 